• For private circulation only

Book Post

https://christianhistoricalsociety.in/

கிறிஸ்தவ

# வரலாற்றுச் சுவடுகள்

• செப்டம்பர் 2026

திசை தெரியாமல் திகைக்காதிருக்க திருச்சபை வரலாறு தெரியவேண்டும்

• விலை : ரூ 60 • இதழ் 76



www.christianhistoricalsociety.in

தூய மத்தியாஸ் தேவாலயம்
வேப்பேரி, சென்னை

www.christianhistoricalsociety.in

# பதிப்பாசிரியர்...

அன்பு வாசகர்களுக்கு இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்!

"பூர்வ நாட்களில் நீர் நடத்தி வந்த கிரியைகளை எங்கள் பிதாக்கள் சொல்லக் கேட்டோம்" (சங்கீதம் 44:1) என்ற திருவசனத்தின்படி, தேவன் நம் முன்னோர்களின் வாழ்வில் செய்த அதிசயங்களையும், அவர்கள் கடந்து வந்த விசுவாசப் பாதையையும் ஆவணப்படுத்தி அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்லும் ஒரு பாலமாக 'கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்' இதழ் விளங்கி வருகிறது.

வரலாறு என்பது வெறும் காகிதங்களில் எழுதப்பட்ட தகவல்கள் அல்ல; அது நமக்கான வழிகாட்டி. "ஒருவன் எனக்குத் தெரிவிக்காவிடில் அது எனக்கு எப்படித் தெரியும்" (அப்போஸ்தலர் 8:31) என்று அன்று எத்தியோப்பிய மந்திரி கேட்ட கேள்வி, இன்றும் நமக்கு ஒரு பெரிய பொறுப்பை நினைவூட்டுகிறது. ஆம், நமது மேன்மையான திருச்சபை வரலாற்றையும், விசுவாச வீரர்களின் தியாகங்களையும் யாராவது ஒருவர் தெரிவிக்காவிட்டால், வருங்காலத் தலைமுறைக்கு அது எப்படித் தெரியும்? அந்தப் பணியைத் தான் உங்கள் ஆதரவுடன் இந்த இதழ் தொடர்ந்து செய்து வருகிறது.

இந்த 76-வது இதழில் சென்னை எழும்பூரில் உள்ள 'கென்னட் சந்து' என்ற பெயருக்குப் பின்னால் வாழ்ந்த இறையியல் அறிஞர் ரெவரெண்ட் டாக்டர் சார்லஸ் எக்பெர்ட் கென்னட் அவர்களின் வாழ்வு மற்றும் தமிழ்ப்பணி.

இந்தியாவின் பழமையான ஆங்கிலிக்கன் ஆலயமான கோட்டை செயின்ட் மேரிஸ் ஆலயத்தின் 346 ஆண்டு கால வரலாற்றுப் பயணம். அயர்லாந்து மிஷனரி ஏமி கார்மைக்கேல் (அம்மை) அவர்களின் தியாகம் மற்றும் விசுவாசப் பாதையில் ஒரு பெரும் புரட்சியை ஏற்படுத்திய ஜே.சி. அருளப்பன் ஆகியோரின் வரலாற்றுச் சுருக்கம். விவிலிய நிகழ்வுகளுக்கு அறிவியல் மற்றும் தொல்லியல் அளிக்கும் வியக்கத்தக்க சான்றுகள்.

மேலும், கடந்த ஆகஸ்ட் 15, 2026 அன்று நமது வரலாற்றுச் சங்கத்தின் நூலகம் மற்றும் அருங்காட்சியகத்தில் முதல் முறையாக இந்திய தேசியக் கொடி ஏற்றி சிறப்பிக்கப்பட்டது, நமது சங்கத்தின் மைல்கல்லாகும்.

"திசை தெரியாமல் திகைக்காதிருக்க திருச்சபை வரலாறு தெரியவேண்டும்" என்ற நமது இலக்கை நோக்கித் தொடர்ந்து பயணிப்போம். வரலாற்றைத் தெரிந்துகொள்வோம், அதைத் தெரிவிப்போம்!

இறைவன் உங்களை ஆசீர்வதிப்பாராக!

அன்புடன்,
மன்னா செல்வகுமார்,
பதிப்பாசிரியர்,


கிறிஸ்தவ
வரலாற்றுச் சுவடுகள்

கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்
மாத இதழ் 76 | செப்டம்பர் 2026

ஆசிரியர்: மன்னா செல்வகுமார்
வடிவமைப்பு: சுஜித் ரெக்ஸ்
வெளியீடு: கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்



கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்,
கதவு எண்: 2-2-3(4), வடக்குத்தெரு,
பங்களாச் சுரண்டை - 627859,
தென்காசி மாவட்டம், தமிழ்நாடு.
தொலைபேசி: 04633 290401, 91767 80001
மின்னஞ்சல்: christianhistorical@gmail.com
இணையதளம்: www.christianhistoricalsociety.in


| சந்தா விவரம் | நன்கொடை |
|---|---|
| தனிப்பிரதி | ₹60 + நன்கொடை |
| ஆண்டு சந்தா | ₹600 + நன்கொடை |
| ஐந்து ஆண்டு சந்தா | ₹3000 + நன்கொடை |

**CHRISTAVA VARALATRU SUVADUGAL**

**A/c Number : 1748 020000 5614**

**Bank name : Federal Bank**

**IFSC code: FDRL0001748**

UPI ID: mannaselvakumar@okicici

+91 9176780001

G Pay

www.christianhistoricalsociety.in

இது ஒரு வரலாற்றுச் சங்க உறுப்பினர்களுக்கான பதிப்பு. தனிப்பட்ட சுழற்சிக்கு மட்டும். சந்தா விபரங்கள் மற்றும் நன்கொடை அளிக்கும் முறைகள் கடைசிப் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளன.

# வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயம்!

## 15 ஆகஸ்ட் 2026 – இந்தியாவின் 80-வது சுதந்திர தின விழா




கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கத்தின் நூலக மற்றும் அருங்காட்சியகத்தில், முதன்முறையாக இந்திய தேசியக் கொடி ஏற்றப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வு இன்று நடைபெற்றது.

கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கத்தின் தலைவர் திரு. A.S.A.R பாலசந்திரன் அவர்கள் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார். திரு. டி.டி.வி. சந்திரசேகரன் அவர்கள் நிகழ்ச்சிக்கு முன்னிலை வகித்தார்.

திரு. ஜி. ஆல்வின் ஜேக்கப் அவர்கள் இந்தியச் சுதந்திர வரலாற்றையும், தேசத்தின் வளர்ச்சியில் கிறிஸ்தவர்களின் பங்களிப்பையும் பகிர்ந்துகொண்டார். திரு. தமிழரசன் மற்றும் ஐ.எம்.எஸ். ஊழியர் திரு. ஜேசுதுரை ஆகியோர் தேசத்தின் நலனுக்காகச் சிறப்பு ஜெபம் செய்தனர்.

இவ்விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட திருமதி ASAR பிரின்சஸ் அவர்கள் நிகழ்வைச் சிறப்பித்தார். நிறைவாக, கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு. மன்னா செல்வகுமார் அவர்கள் கலந்துகொண்ட அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

**வரலாற்றைப் பாதுகாக்கும் இல்லத்தில், தேசத்தின் மூவர்ணக் கொடி பெருமையுடன் உயர்ந்தது!**

இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க தருணத்தில் கலந்துகொண்டு விழாவைச் சிறப்பித்த சங்க உறுப்பினர்கள், சிறப்பு விருந்தினர்கள் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் எங்களது மனமார்ந்த நன்றிகள்!

கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்








**எழும்பூர் கென்னட் சந்தின் பின்னே மறைந்துள்ள ஒரு மாமேதை**

சென்னை, எழும்பூர்: இன்று சென்னையின் பரபரப்பான எழும்பூர் ரயில் நிலையத்திற்கு எதிரே உள்ள 'கென்னட் சந்து' ஒரு வணிகப் பகுதியாகப் பலருக்கும் தெரிந்திருக்கலாம். ஆனால், இந்தப் பெயருக்குப் பின்னால் பத்தொன்பதாம் நூற்றாண்டு இந்தியாவின் மிகச்சிறந்த இறையியலாளர் மற்றும் திராவிட மொழி அறிஞர்களில் ஒருவரான ரெவரெண்ட் டாக்டர் சார்லஸ் எக்பெர்ட் கென்னட் (1826-1884) அவர்களின் வரலாறு மறைந்துள்ளது.

**யார் இந்த எக்பெர்ட் கென்னட்?**

சென்னையில் பிறந்து, கல்கத்தாவில் கல்வி பயின்ற இவர், தனது அபார அறிவாற்றலால் 'இந்தியாவின் புசி' (Pusey of India) என்று போற்றப்பட்டவர். ஆங்கிலிகன் திருச்சபையின் ஒரு தூணாக விளங்கிய இவர், திருநெல்வேலி பகுதியில் நீண்ட காலம் மதப்பணியாற்றினார். பின்னர் சென்னை அடையாறு பகுதியில் உள்ள எஸ்பிஜி (SPG) இறையியல் கல்லூரியின் முதல்வராகப் பொறுப்பு வகித்தார்.

**தமிழ் மற்றும் திராவிட மொழி ஆய்வு:**

வெறும் மத போதகராக மட்டுமல்லாமல், சிறந்த மொழி ஆராய்ச்சியாளராகவும் கென்னட் திகழ்ந்தார். 1849-லேயே கோண்டி மொழிக்கும் தமிழுக்கும் உள்ள தொடர்பை ஆராய்ந்து கட்டுரை எழுதியவர் இவர். சைவ சித்தாந்தம் மற்றும் வைணவ நெறிகள் குறித்த ஆழ்ந்த புலமை பெற்றிருந்த இவர், அவற்றை மேலை நாடுகளுக்குத் தனது எழுத்துக்களின் மூலம் அறிமுகப்படுத்தினார்.

**மறைந்திருந்த மனிதாபிமானத் தொடர்பு:**

பிரபல வங்காளக் கவிஞர் மைக்கேல் மதுசூதன் தத்தா சென்னையில் வாழ்ந்த காலத்தில் அவருக்குப் புகலிடம் அளித்து, அவரது குடும்பத்திற்கு உற்ற நண்பராக விளங்கியவர் கென்னட். மதுசூதன் தத்தா தனது குழந்தைக்கு 'கென்னட்' எனப் பெயரிடும் அளவுக்கு இவர்களது நட்பு ஆழமானது. தத்தா சென்னையை விட்டுச் சென்ற பிறகும், கைவிடப்பட்ட நிலையில் இருந்த அவரது குடும்பத்திற்குப் பெரும் ஆதரவாகக் கென்னட் குடும்பத்தினர் இருந்தனர் என்பதை வரலாற்று ஆய்வாளர் வி.பி. கணேசன் அவர்களின் சமீபத்திய ஆய்வுகள் உறுதிப்படுத்துகின்றன.

## அழியாத நினைவுகள்:

சென்னை எழும்பூரில் உள்ள புனித யோவான் திருச்சபையில் (St. John the Baptist Church) நீண்ட காலம் பணியாற்றிய இவரை கௌரவிக்கும் விதமாகவே, அந்தத் தேவாலயத்தின் அருகே உள்ள சாலைக்கு 'கென்னட் சந்து' எனப் பெயரிடப்பட்டது. 1884-ல் அவர் மறைந்த பிறகு, அவரது சேகரிப்பில் இருந்த அரிய புத்தகங்களைக் கொண்டு 'கென்னட் நினைவு நூலகம்' உருவாக்கப்பட்டது.

**பத்தொன்பதாம் நூற்றாண்டின் இணையற்ற இறையியலாளராகவும், திராவிட மொழி அறிஞராகவும் திகழ்ந்த ரெவரெண்ட் டாக்டர் சார்லஸ் எக்பெர்ட் கென்னட் (1826-1884) அவர்களின் இருநூற்றாண்டு நினைவை முன்னிட்டு, இந்த மாதம் 21-ஆம் தேதி அவர் குறித்த வரலாற்று நினைவுகள் போற்றப்படுகின்றன.**

இன்று நாம் கடந்து செல்லும் ஒரு சிறிய வீதி, ஒரு காலத்தில் உலகப் புகழ்பெற்ற இறையியலாளராகவும், மனிதாபிமானியாகவும் வாழ்ந்த ஒருவரின் அடையாளத்தைத் தாங்கி நிற்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.




கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்

மாத ஆய்விதழ் சந்தா விபரம்

| சந்தா விபரம் | உள்நாடு |
|---|---|
| தனிப்பிரதி | ₹ 60 + நன்கொடை |
| ஆண்டு சந்தா | ₹ 600 + நன்கொடை |
| ஐந்து ஆண்டு சந்தா | ₹ 3000 + நன்கொடை |

வங்கி விபரம்

Name: CHRISTAVA VARALATRU SUVADUGAL

A/c Number : 1748 020000 5614

Bank name : Federal Bank

IFSC code: FDRL0001748

"கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்"
மாத ஆய்விதழை நீங்கள்
தொடர்ந்து பெற்றுக் கொள்ள
G-Pay மூலம் நன்கொடை செலுத்த
90420 15221 என்ற எண்ணுக்கு செலுத்தவும்
காசோலை மற்றும் வரைவோலை செலுத்த
"கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்"
( CHRISTAVA VARALATRU SUVADUGAL )
என்ற பெயரில் எடுக்கவும்



கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்,
கதவு எண் 2-2-3(4), வடக்குத்தெரு,
பங்களாச் சுரண்டை-627859,
தென்காசி மாவட்டம் (தமிழ்நாடு)
04633 290401, 91767 80001

christianhistoricalsociety.in
christianhistorical@gmail.com



# அறிவியலின் சுவடுகள்... விவிலியத்தின் சான்றுகள்!

"உண்மையை அறிவீர்கள், உண்மையும் உங்களை விடுதலையாக்கும்." — யோவான் 8:32

— பேசும் பொம்மை ஷாந்தகுமார்

விவிலியம் புராணக் கதைகளின் தொகுப்பா? அல்லது வரலாற்றில் நிகழ்ந்த உண்மைச் சம்பவங்களின் ஆவணமா? பல நூற்றாண்டுகளாக தொடர்ந்த இந்த விவாதத்திற்கு, இன்றைய நவீன தொல் பொருள் ஆராய்ச்சியும், புவியியல் கண்டு பிடிப்புகளும் ஒவ்வொரு நாளும் திடுக்கிடும் பதில்களை தந்து கொண்டிருக்கின்றன.

சமீபத்தில் சாக்கடல் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட சுத்தமான கந்தக உருண்டைகள் முதல் எருசலேமில் கண்டெடுக்கப்பட்ட குளங்கள் வரை, மண்ணில் புதைந்த ஒவ்வொரு சாட்சியும், வேதம் உரைத்தது சத்தியம் என்று உலகிற்கு உரக்கச் சொல்கிறது.

**1. சோதோம் - கொமோராவும் வானத்திலிருந்து பெய்த கந்தக மழை:**

"அப்பொழுது கர்த்தர் சோதோம் கொமோரா என்பவைகளின் மேல், கர்த்தராலே வானத்திலிருந்து கந்தகத்தையும் அக்கினியையும் வருஷிக்கப் பண்ணினார்." ஆதியாகமம் 19:24

சாக்கடலுக்கு அருகிலுள்ள Tall el-Hammam என்ற இடத்தைத்தான் விவிலிய சோதோம் என ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். அங்கு நடந்த ஆய்வுகளில், வெண்மையான சாம்பல் படுக்கைகளுக்கு நடுவே 98% தூய்மை கொண்ட கந்தக உருண்டைகள் (Sulfur Balls) ஏராளமாகக் கண்டெடுக்கப் பட்டுள்ளன.

பூமியில் இயல்பாகக் கிடைக்கும் கந்தகம் இவ்வளவு தூய்மையாக இருக்காது. இது அதீத வெப்பத்தில் உருவானது என்பதும், எரிந்து சாம்பலான மனித எலும்புக் கூடுகளும், உருகிய செங்கற்களும் அங்கு கிடைத்ததும், விவிலியம் சொன்ன "வானத்து அக்கினி"க்கு நேரடி சாட்சியமாக நிற்கிறது.

**2. எரிகோவின் வீழ்ந்த மதில்கள்:**

"ஜனங்கள் ஆர்ப்பரித்தபோது, அலங்கம் இடிந்து விழுந்தது" யோசுவா 6:20

யோசுவாவின் காலத்தில் எக்காளம் ஊதியவுடன், எரிகோவின் மதில்கள் இடிந்து விழுந்ததாக வேதம் கூறுகிறது. தொல் பொருள் ஆராய்ச்சியாளர் John Garstang மற்றும் பிற்கால ஆய்வுகளில், எரிகோவின் பிரம்மாண்டமான மதில்கள் வெளிப் புறமாகச் சரிந்து விழுந்திருப்பது உறுதி செய்யப் பட்டது. அதாவது எதிரிகள் உள் நுழைந்து இடிக்கவில்லை, மாறாக ஒரு பெரும் அதிர்வினால், பூகம்பத்தினால் அது தகர்ந்துள்ளது. மேலும், அறுவடை காலத்தில் வீழ்ந்தது என வேதம் சொல்வது போலவே, தானியங்கள் நிறைந்த பானைகள் எரிக்கப்பட்ட நிலையில் அங்கு கண்டெடுக்கப் பட்டன.

**3. செங்கடலின் அடியில் பார்வோனின் தேர்கள்:**

"கர்த்தர் சமுத்திரத்தின் ஜலத்தை அவர்கள் மேல் திரும்பி வரும்படி செய்தார்."- யாத்திராகமம் 14:26

மோசே இஸ்ரவேலரை வழி நடத்திச் சென்ற பாதையாகக் கருதப்படும் அகபா வளைகுடா (Gulf of Aqaba) பகுதியில், கடலின் அடியில் பவளப் பாறைகளால் மூடப்பட்ட பழங்கால எகிப்திய தேர்ச் சக்கரங்கள், மனித மற்றும் குதிரை எலும்புக் கூடுகள் கண்டெடுக்கப் பட்டதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். இந்த சக்கரங்களின் வடிவமைப்பு

எகிப்தின் 18-வது வம்ச காலத்து தேர்களோடு ஒத்துப் போவது, விவிலிய வரலாற்றை மீண்டும் உறுதிப் படுத்துகிறது.

**4. தாவீதின் நகரமும், வம்சமும்:**

விவிலியத்தில் சொல்லப்பட்ட தாவீது ராஜா உண்மையில் வாழ்ந்தாரா என்ற கேள்விக்கு 1993-இல் கண்டெடுக்கப்பட்ட 'தெல் தாண்' (Tel Dan) கல் வெட்டு முற்றுப் புள்ளி வைத்தது. அதில் "தாவீதின் வம்சம் - House of David" என்று தெளிவாகப் பொறிக்கப் பட்டிருந்தது.

**5. சீலோவாம் குளம்:**

அதேபோல், இயேசு பிறவிக் குருடனை சுகமாக்கிய 'சீலோவாம் குளம்' (Pool of Siloam - யோவான் 9:7) கற்பனை அல்ல. 2004-ஆம் ஆண்டு எருசலேமில் கழிவு நீர் குழாய் பணியின் போது தற்செயலாக அந்த பிரம்மாண்ட குளம் கண்டு பிடிக்கப்பட்டது.

**6. பொந்தியு பிலாத்துவின் கல்வெட்டு:**

இயேசுவை சிலுவையில் அறைய தீர்ப்பளித்த பொந்தியு பிலாத்து, உண்மையில் இல்லை என்று சிலர் வாதிட்டனர். ஆனால் 1961-இல் செசரியா (Caesarea) நகரில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டில் "Pontius Pilatus, Prefect of Judea" என்ற பெயர் தெளிவாக இருந்தது.

**7. ஏசாயா தீர்க்கதரிசியின் முத்திரை மற்றும் எசேக்கியா ராஜாவின் சுரங்கம்:**

எருசலேமில் தாவீதின் நகரத்தில் நடந்த அகழ்வாராய்ச்சியில், ஏசாயா தீர்க்கதரிசியின் முத்திரை (Seal of Isaiah) கண்டெடுக்கப் பட்டது. மேலும், 2 நாளாகமம் 32:30-இல் சொல்லப் படுவது போல, அசீரிய முற்றுகையிலிருந்து நகரைக் காக்க எசேக்கியா ராஜா வெட்டிய 533 மீட்டர் நீளமுள்ள நீர்ச் சுரங்கம் (Hezekiah's Tunnel) இன்றும் எருசலேமில் பயன் பாட்டில் உள்ளது.

**8. பெதஸ்தா குளம்:**

யோவான் 5-ஆம் அதிகாரத்தில் இயேசு திமிர்வாதக்காரனை குணமாக்கிய 5 மண்டபங்கள் கொண்ட பெதஸ்தா குளம் (Pool of Bethesda) கற்பனை என்று நினைத்தனர். அது 19-ஆம் நூற்றாண்டில், எருசலேமில் அதே 5 மண்டபங்களுடன் கண்டு பிடிக்கப் பட்டது.

**9. தீக்கிரையாக்கப்பட்ட சாலொமோனின் ஆலயம்:**

"அவர்கள் தேவனுடைய ஆலயத்தைச் சுட்டெரித்து, எருசலேமின் மதிலை இடித்து, அதின் அரமனைகளை எல்லாம் அக்கினியால் சுட்டு, அதிலிருந்த உச்சிதமான பணி முட்டுகளையெல்லாம் அழித்துப் போட்டார்கள்." 2 நாளாகமம் 36:19.

எருசலேமின் புகழ் பெற்ற முதல் தேவாலயமான சாலொமோன் கட்டிய ஆலயம், பாபிலோனிய மன்னன் நேபுகாத்நேச்சாரால் தீக்கிரையாக்கப்பட்ட சம்பவத்தை வேதம் தெளிவாக பதிவு செய்கிறது. இப்போது 2,600 ஆண்டுகளுக்கு பிறகு அதற்கான நேரடி சாட்சி கிடைத்துள்ளது!

எருசலேமின் 'தாவீதின் நகரம்' (City of David-Givati Parking Lot) பகுதியில் இஸ்ரேலிய தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் (IAA) நடத்திய அகழ்வாராய்ச்சியில், கி.மு. 586-ஆம் ஆண்டைச் சேர்ந்த எரியுண்ட மரத்தூண்கள் (Sycamore & Coniferous wood beams) கண்டெடுக்கப் பட்டுள்ளன. ஆச்சரியம் என்னவென்றால், ஆலயம் தீக்கிரையான போது மேற்கூரையின் பிளாஸ்டர் உருகி இந்த மரத் துண்டுகளை மூடியதால், அவை சாம்பலாகாமல் 2,600 ஆண்டுகளாக அப்படியே பாதுகாக்கப் பட்டுள்ளன.

பல ஆண்டுகளுக்கு பிறகு சிறையிருப்பிலிருந்து திரும்பிய இஸ்ரவேலர்கள், இந்த பேரழிவின் நினைவாகவும், எச்சரிப்பாகவும் இந்த எரிந்த இடிபாடுகளை அப்படியே விட்டுவிட்டு அதன்மேல் புதிய கட்டிடங்களைக் கட்டி உள்ளனர்.

**முடிவுரை:**

மண்ணுக்குள் புதைந்து கிடக்கும் ஒவ்வொரு செங்கல்லும், சாம்பலாகிப் போன ஒவ்வொரு நகரமும், கடலுக் கடியில் உறங்கும் ஒவ்வொரு தேர்ச் சக்கரமும் விவிலியத்தின் பக்கங்களுக்கு உயிர் கொடுக்கின்றன. அறிவியல் வளர வளர, வேதத்தின் சத்தியம் மேலும் மேலும் பிரகாசிக்கிறது!

விவிலியம் என்பது வெறும் நம்பிக்கையின் நூல் அல்ல; அது காலத்தின் சுவடுகள் தாங்கிய வரலாற்றின் வழி காட்டி!

**"என் எஜமானனின் பணிக்காக நான் முழுமையாக செலவழிக்கப்படத் தயாராக இருக்கிறேன்"**

Rev. James Hough

தொடர் நாவல்

# ஓடிப்போனவன்

## 23





**முனைவர் த ஜான்சி பால்ராஜ்**
நாவலாசிரியர்

விஜயராமபுரத்தில் தாவீதின் மாமன் வீட்டில் தங்கியிருந்த ஆபிரகாம் உபதேசியாரோடு தேவசகாயம், மதுரநாயகம், வேதமுத்து ஆகியோரும் சேர்ந்து சமயப்பணியில் ஈடுபட்டு வந்தனர். தினமும் ஆலயத்தில் வழிபாடு உற்சாகமாக நடைபெற்றது. மக்கள் புதியவர்களின் போதனைகளைக் கேட்க ஆர்வத்தோடு வழிபாட்டுத் தலத்திற்கு வந்தனர். அவர்களது வருகை விஜயராமபுரத்தைச் சுற்றியுள்ள ஊர்களுக்கும் பரவியது. அவர்களது நடை, உடை, பாவனைகள் மற்றும் நடத்தைகளும் மக்கள் மனதில் பதிந்து போனது. அவர்கள் நாவிலிருந்து உதிரும் ஒவ்வொரு வார்த்தைகளையும் இறைவாக்கியங்களாகவே உணர்ந்தனர்.

இந்நிலையில் அவர்களது வருகை தாவீதின் மாமன் வீட்டாருக்கு மிகுந்த மகிழ்ச்சியாகவும் பெருமிதமாகவும் இருந்தது. தன் வீட்டில் இத்தனை பேரும் தங்கி இருந்து ஆண்டவருடைய பணியைச் செய்வது தன் பாக்கியம் என்றே எண்ணினார் அவர்.

ஆனால் அவர்கள் உணவு உண்பதில் மட்டும் வேறுபாடு காண்பித்தனர். தாவீதின் வீட்டில் சமைத்த உணவை அவர்களோடு அமர்ந்து உண்ண மறுத்துவிட்டனர். அதற்கு, "எங்களது உணவுப் பழக்கம் வேறு, உங்களது உணவுப் பழக்கம் வேறு. . . எனவே நாங்களே எங்களுக்கான உணவைச் சமைத்துக் கொள்கிறோம்" என்று மழுப்பலாகப் பதில் கூறினர்.

அதை உண்மையென நம்பிய தாவீதின் மாமன், "நீங்க கேக்கும் உணவை செஞ்சு குடுக்க எங்களுக்கு முடியும். நான் இப்போதே சந்தைக்குப் போறேன். உங்களுக்கு வேண்டிய காய்கறியள கொண்டாறேன். தாவீது சொல்லியிருக்கான், நீங்க யாரும் எறைச்சி திங்க மாட்டியன்னு. எங்களுக்கு கருவாட்டு கவுச்சையாவது இருந்தால் தான் கஞ்சியே இறங்கும். ஆனா பாருங்க. . . சார்வாள், நீங்க வந்த பெறவு நாங்களும் பச்சைக் காய்கறிகதான் திங்கோம். நீங்க இப்பிடி தனியா பொங்கத எங்களால தாங்கவே முடியல" என்றவர் கண்கலங்கி அன்பொழுக புன்னகைத்தார்.

"வேண்டாம், வேண்டாம். நாங்களே வாங்கிக் கொள்கிறோம். எங்களால் சிரமம் வேண்டாம்" என்றார் ஞானபிரகாசம். எவ்வளவு சொல்லியும் கேட்காமல் அவர்களுக்கென்று தனியாகச் சில பாத்திரங்களை வைத்து, வீட்டின் வெளியே ஒரு ஓரமாக அடுப்பை மூட்டி, தாங்களே உணவு சமைத்து உண்ணத்

தொடங்கினர்.

ஓரிரு நாட்கள் செல்லச் செல்ல அந்தக் காட்சி அவனுடைய மனதைப் பெரிதும் வாட்டத் தொடங்கியது.

தாவீதும் சத்தியநாதனும் வெளியூர்களுக்குச் சென்று சமயப்பணி செய்து கொண்டிருந்ததால், இந்த விஷயம் அவர்களுக்குத் தெரியவில்லை. அன்று மாலை அவர்கள் இருவரும் ஊர் திரும்பினர்.

தாவீது வழக்கம்போல உற்சாகமாக வீட்டிற்குள் நுழைந்தான்.

"மாமா. . . எல்லாரும் நல்லா இருக்கீங்களா? ஆபிரகாம் ஐயா எங்கே? தேவசகாயமும் மதுரநாயகமும் வந்துட்டாங்களே. . . எல்லாரும் சந்தோஷமா இருக்காங்களா?" என்று கேட்டபடியே உள்ளே வந்தான்.

ஆனால் எதிரே நின்றிருந்த மாமனின் முகத்தைப் பார்த்ததும் அவன் பேச்சு நின்றுபோனது. அவரது முகம் வாடியிருந்தது.

"என்ன மாமா? ஏதாவது வேண்டாத காரியம் நடந்துச்சா?" என்றான் தாவீது.

"ஒண்ணுமில்ல தாவீது. . . நீ மொதல்ல குளிச்சிட்டு சோறு தின்னு" என்றான்.

"ஒண்ணுமில்லன்னா இப்படியா முகம் வாடியிருக்கும்? என்ன விஷயம்? சொல்லுங்க மாமா.

"தாவீது. . . நீங்க எல்லாரும் ஆண்டவரோட பணிக்காக இங்க வந்திருக்கீங்கன்னு நினைச்சு ரொம்ப சந்தோசப்பட்டேன். நம்ம வீட்டிலேயே தங்கி இருந்து ஊருக்குள்ள சுவிசேஷம் சொல்லப் போறீங்கன்னு நினைச்சேன். " அவன் குரல் தழுதழுத்தது.

"ஆனா. . . இவங்க நம்ம வீட்டுச் சாப்பாட்டை சாப்பிட மாட்டேங்கிறாங்க. ஏன்னு எனக்குத் தெரியல. தாவீது. . . நம்ம ஊர்ல ஒரு வழக்கமிருக்கே. . . வெயில்ல நடந்து போறவனைக் கூட நம்ம வீட்டுத் திண்ணையைக் கடந்து வெறும் வயித்தோட போக உடமாட்டோம். 'வாப்பா. . . கொஞ்சம் நீத்தண்ணி குடிச்சிட்டுப் போ'ன்னு கூப்பிட்டு, நீத்தண்ணியோட கருப்பட்டியையும் ஒடைச்சி குடுத்து வயித்தை ஆத்திதான் அனுபுவோம். வழியில போறவனுக்கே இப்படின்னா, நம்ம வீட்டுக்குள்ளே வந்து தங்கியிருக்கிற ஆண்டவரோட ஊழியகாரவிய. . . நம்ம கையால சமைச்ச ஒரு கவளம் சோத்தைக் கூட சாப்பிடாம, அவங்களுக்குன்னு தனியா அடுப்பு மூட்டி பொங்குதாவளே தாவீது. . . இதுதான் என் மனசுக்கு ரொம்ப வேதனையா இருக்கு. நம்ம வீட்டுச் சாப்பாடு பிடிக்கலன்னு சொல்லியிருந்தாகூட பரவாயில்லை. . . ஆனா நம்மள அவியல்லாம் என்ன நெனைக்காவன்னுதான் புரிய மாட்டேங்குது. அதை நினைச்சாத்தான் என் மனசு தாங்கல. "

தாவீது எதுவும் பேசாமல் அப்படியே நின்றிருந்தான். அவன் முகமும் மாறியது. அவன் சத்தியநாதனைப் பார்த்தான். இதுவரை அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்த சத்தியநாதன் மெதுவாக எழுந்து நின்றார். "அப்படியா?" என்றார்.

அந்த ஒரு வார்த்தையில் கோபம் தெரித்தது.

வெளியே நிலவொளியில் புளியமரத்தடியில் பாய் விரித்து தனித்தனியாகப் படுத்திருந்த அவர்களை நோக்கிப் போனார் சத்தியநாதன்.

ஆபிரகாம் உபதேசியார் "ஏசுவே சமாதான காரணரே. . . " என்ற பாடலை மெதுவாகப் பாடிக்கொண்டிருந்தார். சத்தியநாதனைப் பார்த்ததும் எல்லோரும் எழுந்து அமர்ந்தனர்.

"எல்லோரும் எழுந்து வீட்டிற்குள் வாருங்கள். எனக்குத் தெரிந்த ஒன்றிரண்டு காரியங்களை உங்களோடு பேசியாக வேண்டும்" என்றவர் வேகமாக வீட்டிற்குள் நுழைந்தார். அவர்கள் அனைவரும் அவரைத் தொடர்ந்து உள்ளே சென்றனர்.

"நீங்க சுவிசேஷம் சொல்லி யாரை மீட்கப் போறீங்க?" என்ற சத்தியநாதனின் குரலில் கோபம் நிறைந்திருந்தது. உபதேசியர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

"இந்த ஜனங்களைத்தானே?"

எந்தப் பதிலும் இல்லை.

"அப்படியிருக்க, நீங்களே இந்த ஜனங்களுக்குள்ள சாதி பார்த்துப் பிரிஞ்சு நிக்கிறீங்களே! இது என்ன நியாயம்?"

அவருடைய குரல் மேலும் உயர்ந்தது.

"நாம் சொல்லுறதை இந்த ஜனங்கள் கேட்கணும். நாம் போதிக்கிறதை நம்பணும். நாம் காட்டுற வழியில நடக்கணும்னு எதிர்பார்க்கிறோம். ஆனா நாம மட்டும் என்ன செய்றோம்?" என்ற அவர் ஒவ்வொருவரையும் பார்த்தார்.

"நாம சாப்பிடுற பாத்திரம் வேறு. . . நாம சமைக்கிற அடுப்பு வேறு. . . நாம தங்குற இடம் வேறு. . . அப்படின்னா நாம சொல்லுற அந்த அன்பு எங்கே போயிற்று?" யாரிடமிருந்தும் பதில் வரவில்லை.

"ஏசு கிறிஸ்து யாரு தெரியுமா உங்களுக்கு?"

அவருடைய குரலில் இப்போது கோபத்தோடு வேதனையும் கலந்திருந்தது.

"அவர் யூதர். யூத குலத்தில பிறந்தவர். அவர் விரும்பினா யூதர்களுக்குள்ளேயே இருந்து, யூதர்களுக்காக மட்டுமே வாழ்ந்திருக்கலாம். ஆனா அவர் அப்படிச் செய்யலையே!" சிறிது நேரம் நின்றார்.

"இன்னொரு விஷயத்தை நினைத்துப் பாருங்க. யூதர்களுக்கும் சமாரியர்களுக்கும் இடையில எத்தனை காலமா பகை இருந்தது? ஒருத்தரையொருத்தர் ஒதுக்கி வச்சிருந்தாங்க. யூதர்கள் சமாரியர்களோட கலக்கக்கூடாதுன்னு நினைச்சாங்க. ஆனா நம்ம ஆண்டவர் இயேசு கிறிஸ்து அந்த வழக்கத்தையே உடைச்சாரே! கிணற்றடியில் இருந்த சமாரியப் பெண்ணிடம் பேசினாரே! அவள் யார், எந்த இனத்தைச் சேர்ந்தவள், என்ன வாழ்க்கை வாழ்ந்தவள்னு பார்த்து அவர் அவளை ஒதுக்கலையே! அவளோட பேசினார். அவளுக்கு உண்மையைச் சொன்னார். அவளையும் தம்முடைய அன்புக்குள்ளே அழைத்தார்.

தாமே யூத குலத்திலே பிறந்தவராயிருந்தும், யூதன்-சமாரியன் என்று பிரித்து மனிதரைப் பார்க்காதவர்தான் நம் ஆண்டவர். அப்படிப்பட்ட ஆண்டவருடைய பெயரைச் சொல்லிக்கிட்டு, நாம மட்டும் சாதி பார்த்து மனிதனைப் பிரிச்சு நிக்கிறோமே. . . இது ஆண்டவருக்குப் பிடிக்குமா?"

அவர் எல்லாருக்காகவும் வந்தார். எல்லாருக்காகவும் தன்னைத் தந்தார். நம்மைப் போன்றவர்களுக்காகவும் மரித்தார். " உபதேசியார்களின் தலைகள் மெதுவாகக் குனிந்தன.

"நம்மை மீட்க வந்த ஆண்டவரே மனிதர்களுக்குள்ள பிரிவைப் பார்க்கல. ஆனா அவர் பெயரைச் சொல்லி ஜனங்களுக்குள்ள போகிற நாம மட்டும் சாதி பார்த்து சாப்பிடுறோமா?" சத்தியநாதனின் குரல் மேலும் கடுமையானது.

"நீங்க இப்படி நடந்துக்கிட்டா, இந்த ஊர் ஜனங்களுக்கு என்ன போதிக்கப் போறீங்க? வாயால சொல்ற சுவிசேஷத்தையா? இல்ல உங்க நடத்தையால காட்டுற சாதியையா?"

யாரும் தலைநிமிரவில்லை.

"இந்த வீட்டுக்காரன் உங்களைத் தன் வீட்டுக்குள்ளே அழைச்சது ஏன்? நீங்க எந்தச் சாதின்னு கேட்டு அழைக்கல. உங்க சாப்பாட்டைத் தனியா சமைச்சுக்குங்கன்னு சொல்லல. ஆண்டவருடைய பணியாளர்கள்னு நினைச்சு தன் வீட்டையே உங்களுக்கு ஒப்படைச்சிருக்கான். " அவர் தாவீதின் மாமனை நோக்கித் திரும்பினார்.

"அந்த நல்ல மனிதனின் மனதை நீங்க எல்லோரும் காயப்படுத்திட்டீங்க. "

பின்னர் மீண்டும் உபதேசியார்களைப் பார்த்தார்.

"நீங்க இந்த ஜனங்களைப் பழைய வழியிலிருந்து வெளியே கொண்டு வரணும்னுதானே இங்கே வந்தீர்கள்!?, நீங்களே அந்தப் பழைய பாவச் சுவற்றையும் தூக்கிக்கொண்டு அலைகின்றீர்களே!. சாதி பார்த்து மனிதனைப் பிரிக்கிறவனுக்கு, ஆண்டவருடைய அன்பைப் பற்றி பேச என்ன தகுதி இருக்கு?"

அந்த வார்த்தைகள் அத்தனைபேரின் உள்ளத்தையும் தாக்கின. அறைக்குள் அமைதி நிலவியது.

எண்ணெய் விளக்கின் மங்கலான ஒளியில் ஒருவரின் முகத்தையும் ஒருவர் பார்க்க முடியாத அளவுக்கு அவர்கள் தலைகுனிந்து நின்றனர்.

சத்தியநாதன் மெதுவாக மீண்டும் தொடர்ந்தார்.

"நம்மை நம்பி இந்த ஜனங்கள் வர ஆரம்பிச்சிருக்காங்க. அவங்க தங்கள் பழைய வாழ்க்கையை விட்டுட்டு புதிய நம்பிக்கைக்குள்ள வர்றாங்க. அவங்களுக்கு முன்னாடி நாமதான் வழிகாட்டியா இருந்தாக வேண்டும். "

அவரது குரல் இப்போது சற்றுத் தாழ்ந்தது. . . .

"நம்ம வாழ்க்கையிலேயே அந்த மாற்றம் இல்லன்னா. . . நம்ம வார்த்தையை மட்டும் கேட்டு யாராவது மாறுவாங்களா, சொல்லுங்கள்?" யாரும் பதில் சொல்லவில்லை.

இதுவரை அமைதியாக இருந்த ஆபிரகாம் உபதேசியார் மெதுவாகத் தலைநிமிர்ந்தார். "ஐயா, நாங்க தப்பு பண்ணிட்டோம், " என்றார். அவருடைய குரலில் குற்ற உணர்வு தெளிவாகத் தெரிந்தது. மற்றவர்களும் அமைதியாக நின்றிருந்தனர். மாமன் அவர்களை ஏறிட்டுப் பார்த்தான். அவன் முகத்தில் இருந்த வேதனை சற்றே தணிந்தது. தாவீது தனது மாமனின் அருகில் சென்று தோளில் கை வைத்தான்.

எல்லோருமே மெல்ல அவர் அருகில் நகர்ந்து வந்து கொண்டிருந்தனர். . . மன்னிப்புக் கோரும் விதமாக. அதற்குள் மாமன் கைக்கூப்பி நன்றியைத் தெரிவிக்க, அவனது உதடுகள் புன்னகையையும் கண்கள் கண்ணீரையும் கட்டுப்படுத்த முடியாமல் கொட்டிக் கொண்டிருந்தன. . . .

அந்த இரவில் அனைவரும் ஒரே இடத்தில் அமர்ந்து தாவீதின் அத்தை சமைத்த உணவையும் உபதேசியார்கள் சமைத்த உணவையும் சேர்த்து பரிமாறி, ஐக்கிய உணவாக உண்டனர். . . .

அந்தக் காட்சியால் வானம் மழைக்கு ஆயத்தமானது. வந்ததிலிருந்து இரவில் காற்று வேண்டி வெளியே மரத்தடியில் படுத்திருந்த அவர்கள் அனைவருமே அன்று வீட்டிற்குள் படுத்து உறங்கத் தயாராகினர். . .

**தொடர்ந்து பயணிப்போம்...**

**16.08.2026- ஞாயிற்றுக்கிழமை-** காலை சென்னை புனித ஜார்ஜ் கோட்டைக்குள் அமைந்துள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க செயின்ட் மேரிஸ் ஆலயத்தில் (St. Mary's Church, Fort St. George) நடைபெற்ற நற்கருணை ஆராதனையில் பங்கேற்கும் அரிய வாய்ப்பு கிடைத்தது.

இந்த வரலாற்றுப் பயணத்தில் நானும் ஆவணப்பட இயக்குநர் மைக்கேல் அண்ணன் ஆகியோருடன் இணைந்து ஆராதனையில் பங்கேற்றது, நம்பிக்கையையும் வரலாற்றையும் ஒருங்கிணைத்த மறக்க முடியாத அனுபவமாக அமைந்தது.

**1680-ல் தொடங்கிய வரலாறு**

செயின்ட் மேரிஸ் ஆலயம் இந்தியாவின் மிகப் பழமையான ஆங்கிலிக்கன் ஆலயங்களில் ஒன்றாகவும், இந்தியாவின் பழமையான ஆங்கிலிக்கன் ஆலயமாகவும் அதிகாரப்பூர்வ சென்னை மாவட்டத் தகவலில் குறிப்பிடப்படுகிறது. ஆலயத்தின் அடிக்கல் 25 மார்ச் 1678 - Lady Day அன்று நாட்டப்பட்டது. இரண்டு ஆண்டுகளுக்குள் கட்டுமானப் பணிகள் நிறைவடைந்து, 28 அக்டோபர் 1680 அன்று ரெவரண்ட் ரிச்சர்ட் போர்ட்மன் அவர்களால் ஆலயம் அர்ப்பணிக்கப்பட்டது.

அந்தக் காலத்தில் புனித ஜார்ஜ் கோட்டையில் வாழ்ந்த ஆங்கிலேயர்களுக்கான வழிபாடுகள் முதலில் Factory House-ன் உணவறையில் நடைபெற்றன. பின்னர் தனியான ஆலயம் தேவைப்பட்டதன் விளைவாக செயின்ட் மேரிஸ் ஆலயம் உருவானது.

**போர்களையும் வரலாற்றையும் கடந்த ஆலயம்**

ஆலயத்தின் கட்டுமானம் அக்காலப் போர் சூழலையும் கருத்தில் கொண்டு வலுவாக அமைக்கப்பட்டது. தடித்த சுவர்களும் தனித்துவமான வளைந்த கூரையும் ஆலயத்திற்கு பாதுகாப்பை வழங்கின. 1758 - 1759 காலகட்டத்தில் பிரெஞ்சுப் படைகள் மதராஸை முற்றுகையிட்டபோது, இந்த ஆலயம் ஒரு காலத்தில் படைவீரர்களுக்கான barracks மற்றும் தானியக் கிடங்காகவும் பயன்படுத்தப்பட்டது.

**வரலாற்றுச் சிறப்புமிக்க திருமணங்கள்**

இந்த ஆலயத்தில் நடைபெற்ற முக்கிய வரலாற்று நிகழ்வுகளில் ஒன்று ராபர்ட் கிளைவ் மார்கரெட் மாஸ்கலின் திருமணம், 1753 ஆகும். இதனால் ஆலயம் ஆரம்பகால பிரிட்டிஷ் மதராஸ் வரலாற்றின் முக்கிய நினைவிடமாகவும் திகழ்கிறது.

**வரலாற்றைச் சுமக்கும் கல்லறைகளும் நினைவுச் சின்னங்களும்**

ஆலயத்தைச் சுற்றியுள்ள கல்லறைப் பகுதியும் தனித்துவமான வரலாற்றுச் சான்றாகும். சென்னை மாவட்ட நிர்வாகத்தின் குறிப்புப்படி, இங்குள்ள tombstones இந்தியாவில் காணப்படும் பழமையான ஆங்கிலேய/பிரிட்டிஷ் கல்லறைக் கல்வெட்டுகளில் அடங்குகின்றன. ஆலயத்தின் உள்ளேயும் பல்வேறு காலங்களைச் சேர்ந்த நினைவுப் பலகைகள் மற்றும் வரலாற்றுச் சின்னங்கள் பாதுகாக்கப்பட்டுள்ளன.

ஆலயத்தின் பல வரலாற்றுப் பதிவுகள் இன்றும் ஆராய்ச்சிக்கு முக்கிய ஆதாரங்களாக உள்ளன. British Library பதிவுகளில் 1680 முதல் 1980 வரையிலான St. Mary's Church வரலாற்றை எடுத்துரைக்கும் தனிப்பட்ட நூல்கள் மற்றும் ஆய்வுப் பதிவுகள் பட்டியலிடப்பட்டுள்ளன.

**நற்கருணை ஆராதனையில் பங்கேற்ற அனுபவம்**

சுமார் 346 ஆண்டுகளுக்கு முன்பு, 1680-ல் அர்ப்பணிக்கப்பட்ட ஆலயத்தில், இன்று நற்கருணை ஆராதனையில் பங்கேற்றது ஒரு சாதாரண ஆலயப் பயணம் அல்ல; அது பல தலைமுறைகளாகத் தொடரும் கிறிஸ்தவ ஆராதனை மரபுடன் நம்மை இணைத்துக் கொள்ளும் ஒரு வரலாற்று அனுபவமாக அமைந்தது.

கடந்த காலத்தில் ஆங்கிலேயர்கள், மிஷனரிகள், நிர்வாகிகள், படைவீரர்கள் மற்றும் பல்வேறு சமூகத்தினரின் வாழ்க்கைச் சுவடுகளைத் தாங்கிய இந்த ஆலயம், இன்று கூட இறை ஆராதனையின் இடமாகத் தொடர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கிறது.

வரலாறு என்பது அருங்காட்சியகங்களில் மட்டும் பாதுகாக்கப்படுவது அல்ல; சில இடங்களில் அது இன்றும் உயிரோடு வாழ்கிறது. செயின்ட் மேரிஸ் ஆலயம் அதற்கான அழகிய சாட்சியாகும்.

இன்றைய ஆராதனைப் பங்கேற்பு, "நம்பிக்கையை வாழ்ந்து, வரலாற்றைப் பாதுகாப்போம்" என்ற எண்ணத்தை மேலும் வலுப்படுத்திய ஒரு மறக்க முடியாத நாளாக அமைந்தது.



# திருநெல்வேலி திருச்சபை வரலாறு

## 22



திருமதி ரெமினா சுஜித்

**டேவிட் ரோசன் ஐயரின் வருகை**

முந்தைய அத்தியாயத்தில், திருநெல்வேலி மிஷனின் நிர்வாகம் S.P.C.K.-யிடமிருந்து S.P.G.-க்கு மாறியதையும், நாசரேத்து மக்கள் ஒரு புதிய தேவாலயத்தைக் கட்டுவதற்காகத் தங்கள் வறுமையிலும் 350 ரூபாயைக் காணிக்கையாகச் செலுத்தியதையும் கண்டோம். இதன் விளைவாக, திருநெல்வேலி மிஷனைக் கவனிப்பதற்காக டேனிஷ் நாட்டைச் சேர்ந்த அருள்திரு. டேவிட் ரோசன் (Rev. David Rosen) ஐயர் நியமிக்கப்பட்டார். இந்தப் பகுதியில் ரோசன் ஐயரின் முதல் பணிக்காலத்தில் (1829-1830) திருநெல்வேலித் திருச்சபை சந்தித்த சவால்கள், நிர்வாகப் பயணங்கள் மற்றும் வளர்ச்சியைக் காண்போம்.

திருநெல்வேலி மிஷனின் பொறுப்பை ஏற்ற குருவானவர் டேவிட் ரோசன் ஜனவரி 21, 1791 அன்று டென்மார்க் நாட்டில் உள்ள எபெல்டாஃப்ட் (Ebeltoft) என்னும் ஊரில் பிறந்தார். 1818-ஆம் ஆண்டு குருவானவராக அபிஷேகம் பண்ணப்பட்ட இவர், 1819-ல் மெட்ராஸ் வந்து தனது இந்திய ஊழியத்தைத் தொடங்கினார். பின்னர் 1820 முதல் 1824 வரை திருச்சிராப்பள்ளியிலும், 1824 முதல் 1829 வரை கடலூரிலும் கர்த்தருக்காகச் சிறப்பாகப் பணியாற்றினார். அதன்பின்னரே, 1829-ல் அவர் திருநெல்வேலி மிஷனைக் கவனிப்பதற்காக நியமிக்கப்பட்டார். (பிற்காலத்தில் நிக்கோபார் தீவுகள் மற்றும் முதலூர் போன்ற பகுதிகளிலும் ஊழியம் செய்தார்.

**பாளையங்கோட்டை மிஷனின் நிலை:**

குருவானவர் டேவிட் ரோசனின் பயணம் அவ்வளவு எளிதானதாக இருக்கவில்லை. அலைக்கழிக்கும் கடலில் சுமார் 19 நாட்கள் நீண்ட, சோர்வுற்ற பயணத்தைக் கடந்து, 1829-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 3-ஆம் தேதி அவர் தூத்துக்குடி கரையை வந்தடைந்தார். புதிய நிலத்திற்கு வந்த அவருக்கு ஒரு நல்ல ஆறுதலாக, அங்குள்ள காவல் கண்காணிப்பாளரான திரு. ரோஸ்மலி காக் (Mr. Rosemaly Kock) அவரை மிகவும் அன்போடு வரவேற்று உபசரித்தார்.

சில நாட்கள் ஓய்வு எடுத்தபிறகு பிறகு, அங்கிருந்து புறப்பட்டு நவம்பர் 6 மற்றும் 7-ஆம் தேதிகளில் குருவானவர் ரோசன் பாளையங்கோட்டையைச் சென்றடைந்தார். அங்குச் சென்ற அவருக்கு உடனடியாகத் தங்குவதற்குச் சரியான இடம் இல்லாததால், C.M.S. சங்கத்தைச் சேர்ந்த சக மிஷனரியான அருள்திரு. ரேனியஸ் (Rev. Rhenius) ஐயர் அவரைத் தனது இல்லத்தில் தங்கி இளைப்பாறும்படி அன்போடு ஏற்றுக்கொண்டார். அதன்பின்பு, மாவட்ட கலெக்டரான திரு. ஜி. ட்ரூரி (Mr. G. Drury) அவர்களை நேரில் சந்தித்து, தான் தங்குவதற்கும் ஊழியங்களைச் செய்வதற்கும் வசதியாக ஒரு வீட்டை ஒதுக்கித் தரும்படி குருவானவர் ரோசன் கோரிக்கை வைத்தார்.

பாளையங்கோட்டையில் மிஷனுக்குச்

சொந்தமான சொத்துக்கள் இருந்தன என்றாலும், நேரில் சென்று பார்த்த குருவானவர் ரோசனுக்கு அது பெரும் அதிர்ச்சியை அளித்தது. பல ஆண்டுகளாகச் சரியான பராமரிப்பு இல்லாததால், மிஷன் பங்களா மிகவும் பரிதாபமான நிலையில் காணப்பட்டது. சுடப்படாத பச்சைச் செங்கற்களால் கட்டப்பட்டிருந்த அந்தப் பழமையான கட்டிடம், எந்த நேரத்திலும் இடிந்து விழும் நிலையில் தள்ளாடிக்கொண்டிருந்தது.

இப்படியாக, தங்குவதற்குச் சரியான வீடு இல்லாத தவிப்பு, இடிந்து விழும் நிலையில் இருந்த மிஷன் சொத்துக்கள் எனப் பல சவால்களுக்கு மத்தியில்தான் அவர் தனது பணியைத் துவங்கினார். நவம்பர் 19-ஆம் தேதியன்று மிஷனின் முழுப் பொறுப்புகளும் அதிகாரப்பூர்வமாக அவரிடம் ஒப்படைக்கப்பட்டன. அதுவரை மிஷனின் கணக்கு வழக்குகளைப் பராமரித்து வந்த ரேனியஸ் ஐயரிடமிருந்து, மிஷனின் வரவு செலவு கணக்குகளையும், மீதமிருந்த இருப்புத் தொகையான 966 ரூபாய், 6 அணா, 10 பைசா (Rs. 966-6-10) பணத்தையும் குருவானவர் ரோசன் முறையாகப் பெற்றுக்கொண்டு, தன் சரித்திரப் பயணத்தைத் தொடங்கினார்.

**2000 விசுவாசிகளின் பின்மாற்றம்:**

குருவானவர் ரோசன் பொறுப்பேற்ற அந்தச் சமயம் திருச்சபைக்கு ஒரு கடுமையான சோதனைக் காலமாக அமைந்தது. ஏனென்றால், காலரா (Cholera) என்னும் கொடிய நோய் அப்பகுதி முழுவதும் கோரத்தாண்டவம் ஆடியது. குறிப்பாக பஞ்சமால் தாலுகாவிற்கு உட்பட்ட காரிக்கோவில், குண்டல், மரக்குண்டல், நாவலடி, எட்சம்குடியிருப்பு, புதூர் போன்ற பெரிய கிராமங்களில் நோயின் தாக்கம் மிகக் கடுமையாக இருந்தது. சிறியவர்கள், பெரியவர்கள் என்ற எவ்விதப் பாரபட்சமும் இல்லாமல் அநேக மக்கள் இந்தக் கொடிய நோயால் பாதிக்கப்பட்டு மடிந்தனர்.

உபதேசியர்கள் சிலருக்கு வியாதி வந்ததால், மற்றவர்கள் நோய்க்குத் தப்பித்துக்கொள்ளத் தங்கள் ஊர்களை விட்டே ஓடிவிட்டார்கள். சரியான கிறிஸ்தவப் போதனையோ, தங்களைத் தேற்ற ஒரு மேய்ப்பனோ இல்லாத நிலையில் அந்த விசுவாசிகள் தவித்தனர். இதைச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்ட சிலர், நீங்கள் கிறிஸ்தவர்களாக மாறியதால்தான் தெய்வங்கள் கோபமடைந்து இந்த வியாதியைக் கொடுத்துள்ளன என்று அவர்களைப் பயமுறுத்தினர். உயிர் பயத்தாலும், சரியான வழிகாட்டுதல் இல்லாததாலும் சுமார் 2,000 கிறிஸ்தவர்கள், தங்கள் விசுவாசத்தைக் கைவிட்டுவிட்டு மீண்டும் தங்கள் பழைய விக்கிரக ஆராதனைக்கே திரும்பிச் சென்றனர். கண்முன்னே இத்தனை பெரிய மந்தை சிதறடிக்கப்பட்டுப் பின்வாங்கிப் போனது, குருவானவர் ரோசனுக்கும் மிஷனரிகளுக்கும் விவரிக்க முடியாத பெரும் வேதனையை அளித்தது. வியாதியினால் சரீர சுகம் தேடி கர்த்தரை விட்டுப் போனவர்கள், சரியான உபதேசியர்களை நியமித்தால் மீண்டும் திரும்பி வருவார்கள் என்று குருவானவர் ரோசன் மிகவும் நம்பிக்கையோடு பதிவு செய்துள்ளார்.

**கிறிஸ்தவர்கள் மீதான ஒடுக்குமுறை:**

ஒருபுறம் காலரா நோயின் மரண ஓலம் மக்களை வாட்டி வதைத்தது என்றால், மறுபுறம் அதிகார வர்க்கத்தின் அடக்குமுறைகள் ஏழைக் கிறிஸ்தவர்களின் கழுத்தை நெரித்தது. கிராமங்களில் அதிகாரம் செலுத்தி வந்த கர்ணம்களும், மிராசுதார்களும் கிறிஸ்தவர்களை வஞ்சித்து, தங்களுடைய சுயலாபத்திற்காக ஒன்றரை பணம் ($1^{1/2}$ fanams) சட்டவிரோத வரியாகக் கட்டும்படி மிரட்டினார்கள். நியாயமற்ற இந்த வரியைக் கொடுக்க மறுத்த அப்பாவி கிறிஸ்தவர்கள் மீது, அந்த அதிகாரிகள் கொடூரமான பொய்க் குற்றச்சாட்டுகளைச் சுமத்தினார்கள்.

குறிப்பாக, இடையன்குடியைச் சேர்ந்த ஆறு கிறிஸ்தவக் குடும்பங்களின் தலைவர்கள் சந்தித்த பாடுகள் நெஞ்சை உலுக்குபவையாகும். எவ்விதத் தவறும் செய்யாத அவர்கள் மீது அநியாயமாகத் திருட்டுப் பழி சுமத்தப்பட்டது. அவர்கள் பற்பநாதபுரத்தில் இருந்து மதுரைக்கும், பின்னர் மதுரையிலிருந்து மீண்டும் பற்பநாதபுரத்துக்கும் குற்றவாளிகளைப் போல இழுத்தடிக்கப்பட்டனர். 1830-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் அவர்கள் குற்றமற்றவர்கள் என விடுவிக்கப்படும் வரை, பல மாதங்களாகச் சரியான உணவு கூட வழங்கப்படாமல், பட்டினியால் கொடூரமாக வதைக்கப்பட்டனர். திக்குத்தெரியாமல் தவித்த இந்த ஏழை மக்களுக்கு ஆதரவாகக் குருவானவர் ரோசன் களத்தில் இறங்கினார்.

நேரடியாக இந்த அநீதியில் தலையிட்ட அவர், அதிகாரிகளின் அச்சுறுத்தல்களுக்குப் பயப்படாமல் மாவட்ட கலெக்டர்களான மன்றோ (Monroe), ட்ரூரி (Drury) மற்றும் லஷிங்டன் (Lushington) ஆகியோரைச் சந்தித்துத் துணிச்சலாகப் புகார் அளித்தார். தன் சொந்த மக்களைப் போல அவர் எடுத்த தீவிர முயற்சியின் விளைவாக, அந்த ஏழைக் கிறிஸ்தவர்களுக்கு இறுதியில் நியாயம் கிடைத்தது; அவர்கள் விடுதலை செய்யப்பட்டார்கள்.

**நாசரேத்து ஆலய அஸ்திபாரம்:**

இத்தனை பாடுகளுக்கு மத்தியிலும் நாசரேத்து மற்றும் முதலூர் சபைகள் மற்றும் அதன் வளர்ச்சி மிஷனுக்கு ஒரு பெரிய ஆறுதலாக அமைந்தன. 1829 ஆம் ஆண்டு கிறிஸ்துமஸ் பண்டிகையை

ஒட்டி குருவானவர் ரோசன் நாசரேத்திற்குச் சென்றார். நாசரேத்து சுமார் 500 மக்களைக் கொண்ட சுறுசுறுப்பான கிராமமாக இருந்தது. பனைத் தொழிலும், கற்கண்டு (Sugar-candy) காய்ச்சும் தொழிலும் அங்கு பிரதானமாக இருந்தன. பளிங்கு கற்களால் (Lime-stone/Marble blocks) கட்டப்பட்ட வீடுகளுடன் அந்த கிராமம் மிகவும் சுத்தமாக இருந்தது.

டிசம்பர் 24 மாலை 8 மணிக்கு, நாசரேத்தில் கட்டப்படவிருந்த புதிய ஆலயத்திற்கான அஸ்திபாரக் கல் நடப்பட்டது. டிசம்பர் 25 அன்று கிறிஸ்துமஸ் ஆராதனையில் 96 பேர் திருவிருந்தில் கலந்துகொண்டனர். டிசம்பர் 26 ஆம் தேதி அதிகாலையில் குருவானவர் ரோசன் நாசரேத்திலிருந்து முதலூருக்குப் புறப்பட்டார். அங்கு அவருக்கு மிகுந்த வரவேற்பு கொடுக்கப்பட்டது, அவர் போகும் வழியில் சுமார் 150 கிறிஸ்தவர்கள், குருவானவர்கள் மற்றும் பள்ளிப் பிள்ளைகளுடன் வந்து அவரை வரவேற்று, ஒருமனதாகக் கீர்த்தனைகளைப் பாடினர். டிசம்பர் 27 அன்று முதலூரில் 200 பேர் திருவிருந்தில் பங்கேற்றனர்.

**பேராயர் ராபின்சனின் வருகை(1830):**

1830 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் மெட்ராஸ் பேராயர் ராபின்சன் (Archdeacon Robinson) நாசரேத்திற்கு வருகை தந்தார். பிப்ரவரி 22-ஆம் தேதி நடந்த ஆராதனையில் மக்கள் கூட்டம் அதிகமாக இருந்ததால் தற்காலிகப் பந்தலுக்கு வெளியே பலர் நிற்க வேண்டியதாயிற்று. துரதிர்ஷ்டவசமாக, பேராயர் கடும் உடல் சோர்வாலும் நோயாலும் பாதிக்கப்பட்டதால், முதலூருக்குச் செல்லும் தனது பயணத்தை ரத்து செய்ய வேண்டியதாயிற்று.

அதே பிப்ரவரி மாதத்தில், பெரியம்மை (Small-pox) நோய் காரணமாக ரேனியஸ் ஐயரின் ஊழியத்தில் உறுதுணையாக இருந்த பூவாணி உபதேசியர் இறந்துபோனார், அவரது குடும்பமும் நோயால் கடுமையாகப் பாதிக்கப்பட்டது.

மேலும், மார்ச் 1830-ல் மிஷனரி சங்கங்களுக்கு இடையே சில கருத்து வேறுபாடுகள் எழுந்தன. சுந்தம்கோட்டை என்ற கிராமத்தில் S.P.G. உபதேசியர் ஆசேர் (Aser) மற்றும் C.M.S. உபதேசியர் நற்குநாதன் ஆகியோருக்கிடையே சபைகளை நிர்வகிப்பதில் மோதல் ஏற்பட்டது. குருவானவர் ரோசன், ரேனியஸ் ஐயரைத் தொடர்புகொண்டு இந்த விவாதத்தை சுமுகமாகத் தீர்த்து, C.M.S. உபதேசியர் அங்கிருந்து திரும்பப் பெறப்பட்டார்.

**இடையன்குடி ஆலயத் திட்டம்:**

ஜூலை 1830-ல் குருவானவர் ரோசன் தனது அடுத்த சுற்றுப்பயணத்தைத் தொடங்கினார். தூத்துக்குடி, சிவத்தையாபுரம் (அங்கு 11 குடும்பங்கள் இருந்தன, ஆனால் பல காரணங்களால் சிதறடிக்கப்பட்டிருந்தன), சாயர்புரம், குலசேகரப்பட்டினம், உவரி, குண்டல், கைலாசபுரம், பற்பநாதபுரம் போன்ற பகுதிகளுக்குச் சென்று ஆராதனைகளை நடத்தினார்.

இதே பயணத்தில் இடையன்குடிக்குச் சென்ற குருவானவர் ரோசன், அங்கு மிகவும் பழுதடைந்திருந்த பழைய தேவாலயத்தைப் பார்வையிட்டார். புதிய ஆலயம் கட்ட 60,000 செங்கற்கள், 50 பனை மரங்கள் உட்பட மொத்தம் 142 ரூபாய் செலவாகும் என மதிப்பீடு செய்தார். இதில் 35 ரூபாயை இடையன்குடியில் உள்ள கிறிஸ்தவர்கள் காணிக்கையாகத் தர ஒப்புக்கொண்டனர்.

கிறிஸ்தவர்கள் மீதான ஒடுக்குமுறைகள் தொடர்ந்ததால், ஆகஸ்ட் 2, 1830 அன்று குற்றாலத்தில் தங்கியிருந்த மாவட்ட கலெக்டர் திரு. எச். ஸ்டோக்ஸ் (Mr. H. Stokes) அவர்களை நேரில் சந்தித்து, கிறிஸ்தவர்கள் படும் இன்னல்களைப் பட்டியலிட்டுப் புகார் அளித்தார்.

**முதல் பணிக்காலத்தின் நிறைவு:**

ஜூன் 1830-ல் எடுக்கப்பட்ட மிஷனின் கணக்கெடுப்பின்படி (Returns), திருநெல்வேலி மிஷனில் மொத்தம் 4,100 கிறிஸ்தவர்கள் இருந்தனர். இதில் 1,111 ஆண்கள், 1,096 பெண்கள், 998 சிறுவர்கள் மற்றும் 895 சிறுமிகள் அடங்குவர்.

செப்டம்பர் 1830-ல் குருவானவர் ரோசன் விடுப்பு எடுத்துக்கொண்டு தனது முதல் பணிக்காலத்தை முடித்துத் தரங்கம்பாடிக்குத் திரும்பினார்.

பிரியமானவர்களே, இன்று நாம் எப்படிப்பட்ட விசுவாசத்தைக் கொண்டிருக்கிறோம்? ஒரு சிறிய வியாதியோ, கஷ்டமோ, நெருக்கடியோ வரும்போது முறுமுறுத்து, பின்வாங்கிப் போகிறோமா? அல்லது அத்தனை பாடுகளுக்கு மத்தியிலும் ஆலயத்திற்கு அஸ்திபாரம் போட்ட மக்களைப் போல உறுதியாய் நிற்கிறோமா? அன்றிருந்த அந்த வைராக்கியமும், உபத்திரவங்களைத் தாங்கும் விசுவாசமும் இன்று நம்மிடம் உள்ளதா? சிந்திப்போம்!

கர்த்தருடைய சபை எத்தனையோ கொள்ளை நோய்களையும், அதிகார வர்க்கத்தின் அடக்குமுறைகளையும் தாண்டித்தான் இன்று நம்மிடம் வந்து சேர்ந்திருக்கிறது. அந்த விசுவாசப் பாதையில் நாமும் உறுதியாய் நடப்போம்!

வரலாற்றின் பக்கங்களிலிருந்து மீண்டும் கர்த்தருடைய ஆவியானவர் நம்மோடு பேசுவாராக!

**தொடர்ந்து பயணிப்போம்...**




தென்னிந்தியாவில் ஆதரவற்ற ஆயிரக்கணக்கான குழந்தைகளுக்குத் தாயாக விளங்கிய அயர்லாந்து மிஷனரி 'ஏமி கார்மைக்கேல்' (டோனாவூர் மக்கள் அவரை 'அம்மை' என்றே அழைத்தனர்) அவர்களின் இறுதிப் பயணம், மரணத்தைக் கடந்த ஒரு மாபெரும் வெற்றியாகவே வரலாற்றில் பதிவாகியுள்ளது. இந்த நெகிழ்ச்சியான வரலாற்றுப் பதிவு.

**மரணமும் ஒரு "பாடும் வார்த்தையே" (A Singing Word):**

பொதுவாக 'இறுதிச்சடங்கு' (Funeral) என்பது இருள் மற்றும் துக்கத்தின் அடையாளமாகவே பார்க்கப்படும். ஆனால் பரிசுத்தவான்களின் மரணத்தில் 'இறுதிச்சடங்கு' என்பது ஒரு "பாடும் வார்த்தையாக" (singing word) இருக்க வேண்டும் என்று ஏமி கார்மைக்கேல் விரும்பினார். அது இருண்ட மேகங்களைக் கிழித்துக்கொண்டு வரும் சூரிய ஒளியைப் போலவும், ஒரு வெற்றியின் எக்காள சத்தத்தைப் போலவும் இருக்க வேண்டும் என அவர் கருதினார்.

**ராஜாவைக் காணச் சென்ற அம்மை:**

பல ஆண்டுகள் உடல்நலக் குறைவால் படுக்கையில் இருந்த ஏமி, 1951-ஆம் ஆண்டு ஜனவரி 18-ஆம் தேதி இம்மானுவேலரின் பாதத்தைச் சென்றடைந்தார். அவருடைய மறைவின் போது எந்தவொரு இருளோ சோகமோ இல்லை. அவருடைய மூச்சு மெல்ல அடங்கியபோது, தேவாலயத்தின் கோபுரங்களில் 'வெற்றி மணிகள்' (joy-bells) முழங்கின. அவர் இறந்துவிட்டார் என்று கூறாமல், "அம்மா ராஜாவைக் காண உள்ளே சென்றுவிட்டார்" என்றே இந்த நாளைக் கொண்டாடினர்.

**வெள்ளையும் மஞ்சளும் கலந்த இறுதி ஊர்வலம்:**

அவருடைய இறுதி ஊர்வலம் பலருக்கும் ஒரு மாபெரும் சாட்சியாக அமைந்தது. மரண ஊர்வலத்தில் துக்கம் அனுசரிக்கப்படுவதில்லை என்பதை நிரூபிக்கும் வகையில், கருப்பு நிற உடைகள் தவிர்க்கப்பட்டன. மாறாக, குழந்தைகள் அனைவரும் தூய்மையைக் குறிக்கும் வெள்ளை மற்றும் டோனாவூர் திருவிழாவைக் குறிக்கும் மஞ்சள் நிற (festival colours) ஆடைகளை அணிந்திருந்தனர். சிறு குழந்தைகள் அன்பைக் குறிக்கும் நீல (Blue) நிற ஆடைகளை அணிந்திருந்தனர்.

குழந்தைகள் தங்கள் கைகளில் பெரணி இலைகளை (ferns) வெற்றியின் அடையாளமாக அசைத்துக்கொண்டு சென்றனர். "அல்லேலூயா! போராட்டம் முடிந்தது, யுத்தம் வெல்லப்பட்டது" (Alleluia! The strife is o'er, the battle done) என்ற வெற்றிப் பாடலைப் பாடியபடியே, அவர்கள் ஏமியின் உடலை 'கடவுளின் தோட்டம்' (God's Garden) நோக்கி ஊர்வலமாக எடுத்துச் சென்றனர்.

**பறவைகள் தொட்டியும் சவுக்கு மரமும் (The Birdbath):**

அங்குள்ள மக்கள் சோகத்தோடு இருந்தாலும், அவர்களின் இதயங்களில் இருளுணர்வு (no gloom) இல்லை; ஏனெனில் அவருடைய உடல் உயிர்த்தெழுதலுக்காக ஒரு விதையைப் போலவே அங்கு விதைக்கப்பட்டது. கடவுளின் தோட்டத்தில் ஒரு சவுக்கு மரத்தின் (tamarisk tree) அடியில்

ஏமியின் உடல் வைக்கப்பட்டது. அப்போது தேவபக்தி என்பவர் வேதாகமத்தின் 1 கொரிந்தியர் 15:50-58 வசனங்களை வாசித்தார்.

அந்த 'கடவுளின் தோட்டத்தில்' உள்ள அனைத்துக் கல்லறைகளும் சமமானவையே; யாருக்கும் ஆடம்பரமான கல்வெட்டுகள் கிடையாது. அதேபோல, ஏமியின் கல்லறைக்கு அருகிலும் எவ்விதமான பெரிய சிலுவையோ கல்வெட்டோ வைக்கப்படவில்லை. மாறாக, பறவைகள் நீர் அருந்துவதற்கான ஒரு சிறிய தொட்டி (humble bird bath) மட்டுமே அங்கு வைக்கப்பட்டது. அதில் எல்லாவற்றையும் குறிக்கும் ஒற்றை வார்த்தையாக "AMMAI" (அம்மை) என்று மட்டுமே பொறிக்கப்பட்டிருந்தது.

ஒரு சாதாரணக் கோதுமை மணி மண்ணில் விழுந்து மடிந்ததால், இன்று இந்தியாவின் லட்சக்கணக்கான மக்களின் வாழ்வில் அது பெருவிருட்சமாக உயர்ந்து நிற்கிறது. மரணம் ஒரு முடிவல்ல, அது நித்தியத்தின் துவக்கம் என்பதை ஏமி கார்மைக்கேலின் இந்த 'இறுதிப் பயணம்' உலகுக்கு உரக்கச் சொல்கிறது!




## உறுப்பினர் திட்டங்கள்

சங்கப் பணிகளில் நேரடியாகப் பங்குகொள்ள விரும்புகிறவர்கள் பின்வரும் உறுப்பினர் திட்டங்களில் இணையலாம்:

### Membership & Donations Details

**Basic**
₹1,000 Register | Updates | Rare books

**Silver**
₹2,000 Basic benefits + Gifts

**Gold**
₹2,500 Silver benefits + 1-Year Magazine

**Platinum**
₹5,000 Gold benefits + 5-Year Magazine

**BANK DETAILS – FOR MEMBERSHIP & DONATIONS**

**Christian Historical Society**
A/c Number: 1748 020000 4906
IFS Code: FDRL0001748
Bank name: Federal Bank
Surandai Branch

### Subscription & Donations Details

Annual Subscription – ₹600

Five-Year Subscription – ₹3000

**BANK DETAILS – FOR SUBSCRIPTION & DONATIONS**

**CHRISTAVA VARALATRU SUVADUGAL**
A/c Number: 1748 020000 5614
IFS code: FDRL0001748
Bank name: Federal Bank
Surandai Branch

UPI ID: 9176780001@okbizaxis

For subscription or donation via GPay
91767 80001



# விசுவாசப் பாதையில் ஒரு இந்திய விடிவெள்ளி: ஜே. சி. அருளப்பனின் உன்னத வரலாறு

பத்தொன்பதாம் நூற்றாண்டில், ஐரோப்பிய மிஷனரி அமைப்புகளின் நிதியுதவியோ அல்லது கட்டுப்பாடோ இன்றி, "தேவன் ஒருவர் மட்டுமே நமது ஆதாரம்" என்ற விசுவாசக் கொள்கையுடன் தென்னிந்தியாவில் ஒரு பெரும் ஆவிக்குரிய மாற்றத்தை ஏற்படுத்தியவர் ஜே. சி. அருளப்பன். விசுவாச ஊழியத்தின் (Faith Mission) முன்னோடியாகத் திகழ்ந்த இவருடைய வாழ்வு, இன்றும் ஒவ்வொரு ஊழியருக்கும் ஒரு சிறந்த முன்மாதிரி.

**ஆவிக்குரிய அடித்தளம்**

ஜான் கிறிஸ்டியன் அருளப்பன் 1810-ஆம் ஆண்டு திருநெல்வேலி மாவட்டம் உக்கிரன்கோட்டையில் பிறந்தார். இவருடைய பாட்டனார் ரோமன் கத்தோலிக்கராக இருந்து, புகழ்பெற்ற மிஷனரி டாக்டர் ஸ்வார்ட்ஸ் மூலம் மெய்யான விசுவாசத்தைக் கண்டடைந்தவர். தன் சொந்தச் செலவில் தேவாலயம் கட்டும் அளவுக்குத் தீவிர பக்தியுள்ள அந்தப் பாட்டனாரின் அர்ப்பணிப்பு உணர்வே அருளப்பனுக்கும் ஒரு விதையாக அமைந்தது.

1822-ல் மிஷனரி ரேனியஸின் செமினரியில் சேர்ந்த அருளப்பன், அங்கு இறையியலையும் ஆங்கிலத்தையும் கற்றுக்கொண்டார். ரேனியஸின் "சுதேசக் கிறிஸ்தவம்" மற்றும் "சாதி ஒழிப்பு" குறித்த உறுதியான நிலப்பாடுகள் அருளப்பனின் இளம் மனதில் ஆழமாகப் பதிந்தன.

**ஒரு பிராமணரின் கேலியும்... அருளப்பனின் வைராக்கிய முடிவும்!**

அருளப்பனின் வாழ்வில் மிகப்பெரிய திருப்புமுனை 1837-ல் ஏற்பட்டது. அப்போது அவர் அந்தோனி நோரிஸ் குரோவ்ஸ் (A. N. Groves) என்ற மிஷனரியுடன் இணைந்து சித்தூர் பகுதியில் பணியாற்றி வந்தார். ஒருமுறை அவர்கள் பிரசங்கித்துக் கொண்டிருந்தபோது, ஒரு பிராமணர் அருளப்பனைப் பார்த்து, "இந்த ஆங்கிலேயர் உனக்குச் சம்பளம் கொடுப்பதால்தான் நீ இப்படிப் பிரசங்கம் செய்கிறாய்; பணம் கிடைக்காவிட்டால் நீ இதையெல்லாம் செய்வாயா?" என்று ஏளனமாக வினவினார்.

இந்தச் சொற்கள் அருளப்பனின் இதயத்தைத் தைத்தன. அன்றே அவர் ஒரு தீர்க்கமான முடிவெடுத்தார்: "இனி எந்த மிஷனரி சங்கத்திடமிருந்தும் நான் ஒரு பைசா கூடச் சம்பளமாகப் பெறமாட்டேன். என் தேவன் என்னை நடத்துவார்." இந்த விசுவாச உறுதிதான் அவருடைய ஊழியத்தின் அச்சாணியாக மாறியது.

**கிறிஸ்துவப்பேட்டை: ஒரு விசுவாசக் கிராமம்**

1840-ல் எவ்வித வசதிகளுமின்றி வட திருநெல்வேலி பகுதிக்கு நற்செய்தி அறிவிக்கச் சென்றார் அருளப்பன். 1842-ல் அவர் 'கிறிஸ்துவப்பேட்டை' என்ற கிராமத்தை உருவாக்கினார். சாதிப் பாகுபாடுகளால் ஒடுக்கப்பட்டவர்களும், விசுவாசத்திற்காகத் துன்புறுத்தப்பட்டவர்களும் அங்கு வந்து தங்கி ஒரு குடும்பமாக வாழ இடமளித்தார்.

அவருடைய ஊழியம் சுமார் 90 மைல்கள்

சுற்றளவிற்கு உட்பட்ட முப்பதுக்கும் மேற்பட்ட கிராமங்களுக்குப் பரவியது. 1858-ஆம் ஆண்டு கணக்கின்படி, 800-க்கும் மேற்பட்ட விசுவாசிகள் இவருடைய வழிகாட்டுதலின் கீழ் திரண்டனர்.

**புதிய ஏற்பாட்டு முறையிலான சபையாட்சி**

அருளப்பன் வெறும் பிரசங்கியாக மட்டும் இருக்கவில்லை; ஒரு சிறந்த மேய்ப்பராகவும் திகழ்ந்தார். அவர் பின்பற்றிய சில முக்கிய கொள்கைகள் இன்றும் வியக்கத்தக்கவை:

1. **நிதி சுதந்திரம்:** ஊழியர்களுக்குச் சம்பளம் கிடையாது. அவர்கள் விவசாயம் செய்தோ, தையல் வேலை செய்தோ அல்லது தேவன் விசுவாசிகள் மூலம் தரும் காணிக்கையைக் கொண்டோ வாழ்ந்தனர்.
2. **சாதி ஒழிப்பு:** சபையில் சாதிக்கு இடமே இல்லை என்பதில் அவர் உறுதியாக இருந்தார். 'அன்பு விருந்து' மூலம் அனைத்துப் பின்னணியைச் சேர்ந்த விசுவாசிகளையும் ஒரே பந்தியில் அமரச் செய்தார்.
3. **சுதேசத் தலைமை:** சாதாரண விசுவாசிகளுக்கு முறையான பயிற்சியளித்து அவர்களைச் சிறந்த நற்செய்தியாளர்களாக மாற்றினார்.
4. **திருவருட்சாதனங்கள்:** திருவிருந்து வழங்கவோ, ஞானஸ்நானம் கொடுக்கவோ பட்டயம் பெற்ற குருமார்கள் தேவையில்லை; விசுவாசமுள்ள எவரும் அதைச் செய்யலாம் என்பதை வேதாகம அடிப்படையில் நடைமுறைப்படுத்தினார்.

**1860-ன் மகா எழுப்புதல்**

அருளப்பனின் ஊழியப் பாதையில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியது 1860-ல் ஏற்பட்ட ஆவிக்குரிய எழுப்புதல். இங்கிலாந்தில் ஏற்பட்ட எழுப்புதல்களைப் பற்றி வாசித்த அருளப்பன், அது தமிழகத்திலும் ஏற்படத் தன் விசுவாசிகளுடன் இணைந்து கண்ணீரோடு ஜெபித்தார்.

மார்ச் 4, 1860-ல் ஒரு சாதாரணப் பெண்ணின் மூலம் அந்த எழுப்புதல் தீ பற்றியது. விசுவாசிகள் தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு அழுதனர். சிறிய குழந்தைகள் அந்நிய பாஷைகளில் பேசவும், தீர்க்கதரிசனம் சொல்லவும் தொடங்கினர். அருளப்பனின் மகன்களும் மகள்களும் ஊழியத்தில் தங்களை அர்ப்பணித்தனர். விசுவாசிகள் தங்கள் விலையுயர்ந்த தங்க நகைகளைக் கழற்றி ஏழைகளுக்கு உதவ முன்வந்தனர். இந்த எழுப்புதல் பின்னர் பல மிஷனரி சபைகளுக்கும் பரவி, ஆயிரக்கணக்கானவர்களின் வாழ்வில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது.

**கல்வியும் அச்சுப்பணியும்**

கல்வி அறிவற்ற மக்களும் வேதாகமத்தை வாசிக்க வேண்டும் என்பதில் அருளப்பன் முனைப்புடன் இருந்தார். கிறிஸ்துவப்பேட்டையில் பள்ளிகளைத் தொடங்கினார். பெண் கல்வியை அவர் மிகவும் ஊக்கப்படுத்தினார். 1853-ல் ஒரு பழைய அச்சு இயந்திரத்தை வாங்கி, அதன் மூலம் தமிழில் துண்டுப் பிரசுரங்களையும் பாடல்களையும் அச்சடித்தார். 'வேதத்தின் சுருக்கம்' போன்ற பல நூல்களைத் தமிழாக்கினார்.

**சோதனைகளும் இறுதி யாத்திரையும்**

அருளப்பனின் வாழ்வு போராட்டங்கள் நிறைந்தது. அவர் கல்லெறியப்பட்டார், பலமுறை தாக்கப்பட்டார். குடும்பத்தில் மரணங்களும், வறுமையும் அவரைச் சூழ்ந்தபோதும், தேவன் மீது கொண்ட நம்பிக்கையில் அவர் தளரவில்லை. 1864-ல் வலது கை உடைந்த நிலையிலும் அவர் தொடர்ந்து ஊழியம் செய்தார். 1866-ல் கடும் பஞ்சம் ஏற்பட்டபோதும், அவர் தன் பள்ளியிலுள்ள 40 குழந்தைகளையும் பராமரித்தார்.

1867-ஆம் ஆண்டு மார்ச் மாதம் அவருக்குக் கடும் காய்ச்சல் ஏற்பட்டது. மார்ச் 14-ஆம் தேதி இரவு ஒன்பது மணியளவில், தன் 57-வது வயதில் அவர் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். அவர் மறைவதற்கு முன் சொன்ன கடைசி வார்த்தைகள்: **"நான் நல்ல போராட்டத்தைப் போராடினேன், என் ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன்."** (2 தீமோத்தேயு 4:7).

ஜே. சி. அருளப்பனின் வாழ்க்கை வரலாறு நமக்கு உணர்த்துவது ஒன்றே ஒன்றுதான்: ஊழியத்திற்குத் தேவையானது பணமோ, வெளிநாட்டு ஆதரவோ அல்லது பெரும் அமைப்புகளோ அல்ல; மாறாக, தேவனுடைய வார்த்தையின் மீது கொண்ட அசைக்க முடியாத விசுவாசம் மட்டுமே! ஜி. எச். லாங் கூறுவது போல, அருளப்பன் ஒரு **"மெய்யான உன்னத கிறிஸ்தவர்".** அவருடைய விசுவாசத்தின் கனிகள் இன்றும் திருநெல்வேலி பகுதிகளில் 'கிறிஸ்துவப்பேட்டை' சபையாக நிலைத்து நிற்கின்றன.

**மன்னா செல்வகுமார்**

# சென்னை வேப்பேரி தூய மத்தியாஸ் தேவாலய ஆரம்ப கால சுவடுகள்



தென்னிந்தியக் கிறித்தவ வரலாற்றில், குறிப்பாகச் சென்னை (மெட்ராஸ்) மாநகரத்தின் ஆன்மீக, கல்வி மற்றும் சமூக வளர்ச்சியில் வேப்பேரி தேவாலயம் (Vepery Church - தற்போதைய தூய மத்தியாஸ் தேவாலயம்) மிக முக்கியப் பங்காற்றியுள்ளது. இது இந்தியாவின் மிகப்பழமையான புராட்டஸ்டன்ட் திருச்சபைகளில் ஒன்றாகும். 18 மற்றும் 19-ஆம் நூற்றாண்டுகளில் பிரிட்டிஷ் இந்தியாவில் நிகழ்ந்த போர்கள், பிரெஞ்சுப் படையெடுப்புகள், இடப்பெயர்வுகள் மற்றும் பல்வேறு சமூக-சாதியச் சீர்திருத்தங்களை நேரில் கண்ட வரலாற்றுச் சாட்சியாக இந்த ஆலயம் விளங்குகிறது.

டேனிஷ்-ஹாலே (Danish-Halle) மிஷனரிகளாலும், லண்டன் S.P.C.K. (Society for Promoting Christian Knowledge) சங்கத்தாலும் ஆதரிக்கப்பட்ட வேப்பேரி மிஷன்.

**பிரெஞ்சுப் படையெடுப்பும் வேப்பேரியின் தோற்றமும் (1746-1748)**

வேப்பேரி தேவாலயத்தின் தோற்றம், பிரிட்டிஷ் மற்றும் பிரெஞ்சு அரசுகளுக்கு இடையே ஆசிய மண்ணில் நிகழ்ந்த கடுமையான ராணுவ மோதல்களுடனும், அதனால் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களுடனும் நெருங்கிய தொடர்புடையது.

**சென்னைக் கோட்டை வீழ்ச்சியும் பிளாக் டவுன் அழிவும் (1746)**

1746 செப்டம்பர் மாதத்தில், பிரெஞ்சு கடற்படைத் தளபதி லா போர்டோனைஸ் (La Bourdonnais) தலைமையிலான பிரெஞ்சுப் படைகள் சென்னையைத் தாக்கி, புனித ஜார்ஜ் கோட்டையை (Fort St. George) ஐந்து நாட்கள் குண்டுவீச்சுக்குப் பின்னர் தங்களின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்தன. தொடக்கத்தில் பிரெஞ்சுப் படைகள் கிறிஸ்தவ மிஷன்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதாக வாக்குறுதி அளித்திருந்தன.

ஆனால், மெட்ராஸின் பாதுகாப்பு அரண்களைப் பலப்படுத்துவதற்காகப் பிரெஞ்சு ராணுவக் கட்டுப்பாட்டாளரான டி'எப்ரிமெஸ்னில் (d'Epremesnil) என்பவரின் உத்தரவின் பேரில், கறுப்பர் நகரம் (Black Town) என்று அழைக்கப்பட்ட பூர்வீக இந்தியர்கள் வாழ்ந்த பகுதியின் பெரும்பகுதி இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டது.

இதில், அங்கிருந்த புராட்டஸ்டன்ட் மிஷன் இல்லமும், பள்ளிக்கூடமும் முழுமையாக அழிக்கப்பட்டன; எஞ்சியிருந்த தேவாலயக் கட்டிடம் பிரெஞ்சு ராணுவத்தின் வெடிமருந்து மற்றும் உணவுப் பொருட்கள் சேமிப்புக் கிடங்காக (Magazin) மாற்றப்பட்டது.

**பழவேற்காடு இடப்பெயர்வு (Pulicat Exile)**

இந்த எதிர்பாராத பேரழிவினால் வேப்பேரி மற்றும் மெட்ராஸின் விசுவாசிகள் பெரும் இன்னலுக்கு ஆளாயினர். அப்போது சென்னையின் முதன்மை மிஷனரியாக விளங்கிய ஜோஹன் பிலிப் ஃபேப்ரிசியஸ் (Johann Philipp Fabricius), மிஷன் பள்ளி ஆதரவற்ற குழந்தைகளையும், விசுவாசிகளையும் பாதுகாக்கும் பொருட்டு மெட்ராஸிலிருந்து வடக்கே இருந்த டச்சு குடியேற்றப் பகுதியான பழவேற்காட்டிற்குப் (Pulicat) பாதயாத்திரையாகத் தப்பியோடினார்.`

அங்கு டச்சு ஆளுநர் ஃபேப்ரிசியஸ்

குழுவினரை மிகவும் இரக்கத்துடன் வரவேற்றுப் புகலிடம் அளித்தார். ஃபேப்ரிசியஸ் தனது உபதேசியார் (Catechist) மற்றும் இரண்டு பள்ளி ஆசிரியர்களின் துணையோடு, பழவேற்காட்டில் தங்கியிருந்தபடியே மெட்ராஸைச் சுற்றியிருந்த கிராமங்களுக்குத் தொடர்ந்து சென்று சுவிசேஷப் பணியாற்றினார்.



**ஆக்ஸ்-லா-சாப்பல் உடன்படிக்கையும் வேப்பேரி ஒப்படைப்பும் (1748)**

1748-இல் ஐரோப்பாவில் ஏற்பட்ட அமைதி உடன்படிக்கையின் (Peace of Aix-la-Chapelle) அடிப்படையில், சென்னை மீண்டும் ஆங்கிலேயர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. ஃபேப்ரிசியஸ் தனது ஆதரவற்ற குழந்தைகளுடன் பழவேற்காட்டிலிருந்து மெட்ராஸ் திரும்பினார்.

அப்போது, ஆங்கிலேயக் கடற்படை அட்மிரலான போஸ்காவென் (Boscawen) அவர்களின் நேரடித் தலையீட்டினாலும் பரிந்துரையினாலும், சென்னை வேப்பேரி (Wepery / Vepery) பகுதியில் இருந்த கத்தோலிக்கர்களின் தேவாலயம், தோட்டங்கள் மற்றும் கட்டிடங்கள் அனைத்தும் புராட்டஸ்டன்ட் மிஷனிடம் முறைப்படி ஒப்படைக்கப்பட்டன.

சென்னையில் இருந்த ரோமன் கத்தோலிக்க கப்புச்சின் (Capuchin) துறவிகள் பிரெஞ்சுப் படையெடுப்பின் போது ஆங்கிலேயர்களுக்குத் துரோகம் இழைத்து, பிரெஞ்சுப் படைகளுக்கு உளவு பார்த்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு வேப்பேரியிலிருந்து ஆங்கிலேய அரசால் வெளியேற்றப்பட்டனர்.

இதன் விளைவாக, அவர்களுக்குச் சொந்தமாக இருந்த வேப்பேரி வளாகம் புராட்டஸ்டன்ட் லூத்தரன் மிஷனரிகளிடம் ஒப்படைக்கப்பட்டது. இதுவே சென்னையில் புராட்டஸ்டன்ட் மிஷன் வேரூன்றுவதற்கும், வேப்பேரி முதன்மை மையமாக மாறுவதற்கும் வழிவகுத்த வரலாற்றுத் திருப்புமுனையாகும்.

**வேப்பேரி மிஷனின் வளர்ச்சியும் அச்சுக்கூடப் பணிகளும்**

வேப்பேரியில் குடியேறிய ஃபேப்ரிசியஸ் மற்றும் அவரது உடன் ஊழியரான ஜோஹன் கிறிஸ்டியன் பிரீத்தாப்ட் (Johann Christian Breithaupt) ஆகியோர் இணைந்து வேப்பேரியைத் தென்னிந்தியாவின் தலைசிறந்த ஆன்மீக மற்றும் அறிவுசார் மையமாக மாற்றினர்.

**1758-ஆம் ஆண்டு முற்றுகையும் கொள்ளையும்**

1758 நவம்பரில் பிரெஞ்சு தளபதி லல்லி (Lally) தலைமையிலான பிரெஞ்சுப் படைகள் மீண்டும் மெட்ராஸை முற்றுகையிட்டன. ஆபத்தை உணர்ந்த ஃபேப்ரிசியஸூம் பிரீத்தாப்டும் வேப்பேரி தேவாலயத்தில் கூடி உபவாசித்து இறைவனிடம் வேப்பேரி மிஷனையும், விசுவாசிகளையும், ஆங்கிலேய அரசையும் காக்குமாறு கண்ணீருடன் ஜெபித்தனர்.

பிரெஞ்சுப் படைகள் கறுப்பர் நகரத்தைக் கைப்பற்றிச் சூறையாடின. பிரெஞ்சு சிப்பாய்கள் வேப்பேரி மிஷனரி இல்லங்களையும் ஆலயத்தையும் தாக்கி, கொள்ளையடித்தனர்.

இதனால் மிஷனரிகள் மீண்டும் தங்களின் விசுவாசிகளுடன் பழவேற்காட்டிற்குத் தப்பியோடினர். எனினும், 1769 பிப்ரவரியில் ஆங்கிலேயக் கப்பற்படை மெட்ராஸ் துறைமுகத்திற்கு வந்ததால் பிரெஞ்சுப் படைகள் பின்வாங்கின; மிஷனரிகள் மீண்டும் வேப்பேரிக்குத் திரும்பித் தங்களின் ஆன்மீகப் பணிகளைத் தொடர்ந்தனர்.




**வேப்பேரி மிஷன் அச்சுக்கூடம் (Vepery Mission Press)**

வேப்பேரியின் வரலாற்றில் அங்கு அமைக்கப்பட்ட அச்சுக்கூடம் மிக உன்னதமானது. தரங்கம்பாடி அச்சுக்கூடத்திற்கு அடுத்தபடியாக, வேப்பேரி அச்சுக்கூடம் தென்னிந்தியாவில் தமிழ்

உரைநடை மற்றும் மொழியியல் வளர்ச்சிக்கு வித்திட்டது.

- மிஷனரி ஃபேப்ரிசியஸ் தனது சிறந்த மொழியறிவுத் திறனால் விவிலியத்தைத் தமிழில் மொழிபெயர்த்தார் (Fabricius Version), இது இன்றும் அவரது மொழியாளுமைக்குச் சான்றாக உள்ளது.
- மேலும், தமிழ் அகராதிகள், இலக்கண நூல்கள் மற்றும் பாடப்புத்தகங்கள் வேப்பேரி அச்சுக்கூடத்தின் வழியே அச்சிடப்பட்டு சென்னை மாகாணம் முழுவதும் விநியோகிக்கப்பட்டன.
- S.P.C.K. சங்கம் இந்த அச்சுக்கூடத்தின் நவீனமயமாக்கலுக்குத் தேவையான காகிதங்களையும், அச்சு எழுத்துக்களையும் லண்டனிலிருந்து தொடர்ந்து அனுப்பி ஆதரித்தது.

**புதிய வேப்பேரி தேவாலயக் கட்டுமானம் (1819-1823)**



19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வேப்பேரி மிஷனின் சமூக-ஆன்மீகக் கட்டமைப்பு மேலும் வலுவடைந்தது.

**பிஷப் மிடில்டனின் வருகையும் புதிய தேவாலயத் திட்டமும்**

கல்கத்தாவின் முதலாவது ஆங்கிலேய பிஷப்பான டாக்டர் மிடில்டன் (Bishop Middleton), 1816 மற்றும் 1819-ஆம் ஆண்டுகளில் சென்னை வேப்பேரிக்கு உத்தியோகப்பூர்வ சந்திப்பை மேற்கொண்டார். 1819-இல் தனது இரண்டாவது வருகையின் போது, வேப்பேரி மிஷனின் தூண்களாக விளங்கிய கிறிஸ்டியன் போலே (Christian Pohle) மற்றும் கார்ல் வில்ஹெல்ம் பேசோல்டு (Carl Wilhelm Pazold) ஆகியோர் இயற்கை எய்தியிருந்ததைக் கண்டு மிஷன் பெரும் நிதி நெருக்கடியிலும் ஆள் பற்றாக்குறையிலும் தவிப்பதை உணர்ந்தார்.

மெட்ராஸின் "டிஸ்ட்ரிக்ட் கமிட்டி" (Diocesan Committee) மற்றும் S.P.C.K. சங்கத்தின் துணையோடு வேப்பேரியை மீட்டெடுக்கப் பிஷப் மிடில்டன் முடிவு செய்தார்.

**S.P.C.K.-இன் மாபெரும் நிதியுதவி**

அங்கிருந்த பழைய ஆலயம் சிதிலமடைந்திருந்ததால், வேப்பேரியில் ஒரு பிரம்மாண்டமான புதிய தேவாலயத்தைக் கட்ட பிஷப் திட்டமிட்டார். இதற்கான முழு கட்டுமானச் செலவான 40,000 மார்க் (40,000 Mk) தொகையை இங்கிலாந்தின் S.P.C.K. சங்கம் முழுமையாக ஏற்றுக்கொண்டு வழங்கியது.

இந்த நிதியுதவியின் மூலம் வேப்பேரியில் அசாத்தியமான கோதிக் கட்டடக்கலை நயத்துடன் புதிய தேவாலயம் கட்டி முடிக்கப்பட்டது (தற்போதைய தூய மத்தியாஸ் தேவாலயம்). இத்துடன் வேப்பேரி அச்சுக்கூடமும் புதிய அச்சு இயந்திரங்களுடன் முழுமையாகப் புதுப்பிக்கப்பட்டது.

**வேப்பேரி சபை எதிர்கொண்ட சமூக மற்றும் சாதியச் சவால்கள்**

வேப்பேரி மிஷன் ஆன்மீக ரீதியில் வளர்ந்த அதேவேளையில், 19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் திருச்சபைக்குள் நிலவிய சாதியக் கட்டமைப்புகளால் கடுமையான சவால்களையும் விவாதங்களையும் சந்திக்க நேரிட்டது.

**வேப்பேரி சாதியக் கிறிஸ்தவர்களின் காலனி (Caste Christian Colony)**

அக்காலகட்டத்தில், வேப்பேரி தேவாலயத்தைச் சுற்றி உயர் சாதியிலிருந்து கிறிஸ்தவ விசுவாசத்திற்கு மாறிய கிறிஸ்தவர்களின் பெரியதொரு குடியிருப்பு (Colony) இருந்தது. இவர்களில் பெரும்பாலோர் வேப்பேரி மிஷன் அச்சுக்கூடத்திலும், புத்தகக் பைண்டிங் (Buchbinden) தொழிலிலும் ஈடுபட்டுத் தங்களின் வாழ்வாதாரத்தைப் பெற்று வந்தனர்.

**சாதியப் பாகுபாட்டிற்கு எதிரான மிஷனரிகளின் போராட்டம்**

வேப்பேரி மிஷனரியான ஹாப்ரோ (Haubroe), மிஷனரி ஷெரவ்போகல் (Schreyvogel) மற்றும் திருநெல்வேலியிலிருந்து சென்னைக்கு வந்த புகழ்பெற்ற மிஷனரி கார்ல் தியோபிலஸ் எவால்ட் ரேனியஸ் (C. T. E. Rhenius) ஆகியோர் சபைக்குள்ளும் பள்ளிகளுக்குள்ளும் நிலவிய சாதியப் பாகுபாடுகளை ஒழிக்கத் தீவிரமாக முயன்றனர்.




**பள்ளிக்கூட இருக்கைப் பிரச்சினை:** வேப்பேரி மிஷன் பள்ளிக்கூட வகுப்பறைகளில் உயர்சாதி வீட்டுப் பிள்ளைகளும், ஒடுக்கப்பட்ட (Pariah) விசுவாசிகளின் பிள்ளைகளும் தனித்தனியாக அமரும் வழக்கம் நடைமுறையில் இருந்தது. மிஷனரி ஹாப்ரோ இந்த வழக்கத்தைக் கடுமையாக எதிர்த்து, சாதி வேறுபாடின்றி அனைத்துக் குழந்தைகளும் ஒரே இடத்தில் அமர்ந்து கல்வி பயில வேண்டும் என்ற புதிய ஒழுங்குமுறையைக் கொண்டுவந்தார்

**சபை இருக்கைப் பிரச்சினை:** தேவாலய வழிபாடுகளிலும் சாதிய அடிப்படையில் தனித்தனி இருக்கைகள் பயன்படுத்தப்படுவதை ஹாப்ரோ எதிர்த்தார்.

**சாதியக் கிறிஸ்தவர்களின் எதிர்ப்பு**

மிஷனரிகளின் இந்தச் சமத்துவச் சீர்திருத்த நடவடிக்கைகளால் அதிருப்தியடைந்த வேப்பேரி சாதியக் கிறிஸ்தவர்கள் ஒன்றிணைந்து, தங்களின் சாதியச் சலுகைகளைப் பாதுகாப்பதற்காக மிஷனரிகளுக்கு எதிராக ஒரு வலுவான கூட்டணியை (Alliance) அமைத்துப் போராடினர்.

இந்தச் சமூகப் போராட்டம் வேப்பேரி சபையின் வரலாற்றில் நீண்ட காலச் சவாலாக நீடித்தது, இது அன்றைய மிஷனரிப் பணிகளின் சமூகப் பரிமாணத்தை நமக்குத் தெளிவாக விளக்குகிறது.

**வேப்பேரி ஆலயக் கல்லறைகள் மற்றும் நினைவுச் சின்னங்கள்**

வேப்பேரி தேவாலய வளாகத்தில் அமைந்துள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க கல்லறைத் தோட்டம், தென்னிந்திய மிஷனரி வரலாற்றின் அஸ்திவாரங்களாக விளங்கிய மாபெரும் ஆளுமைகளின் இறுதி ஓய்விடமாகத் திகழ்கிறது.



**1. ஜோஹன் பிலிப் ஃபேப்ரிசியஸ் (Johann Philipp Fabricius) (1711-1791)**

**வரலாற்றுப் பங்களிப்பு:** வேப்பேரி மிஷனின் தந்தை எனப் போற்றப்படுபவர். சென்னையின் போர்க்கால நெருக்கடிகளில் வேப்பேரி சபையைக் காத்தவர். அவரது உன்னதமான தமிழ் விவிலிய மொழிபெயர்ப்பு (Fabricius Bible) தமிழ் உரைநடை வளர்ச்சிக்கு மிக முக்கிய அடித்தளமாகும்.

**மறைவும் கல்லறையும்:** தனது வாழ்நாள் முழுவதையும் வேப்பேரி மக்களின் ஆன்மீகப் பணிக்காக அர்ப்பணித்த ஃபேப்ரிசியஸ், 1791-ஆம் ஆண்டில் காலமானார். அவரது உடல் வேப்பேரி தேவாலய வளாகத்தில் உள்ள கல்லறைத் தோட்டத்தில் பக்தி மரியாதையுடன் அடக்கம் செய்யப்பட்டது.

**2. ஜோஹன் கிறிஸ்டியன் பிரீத்தாப்ட் (Johann Christian Breithaupt) (இறப்பு: 1782)**

**வரலாற்றுப் பங்களிப்பு:** ஃபேப்ரிசியஸின் நெருங்கிய உடன் ஊழியர். 30 ஆண்டுகளுக்கும் மேலாக வேப்பேரி மிஷனரி இல்லங்கள், பள்ளிகள் மற்றும் அச்சுக்கூடப் பணிகளில் ஃபேப்ரிசியஸோடு இணைந்து உழைத்தவர்.

**மறைவும் கல்லறையும்:** 1782-ஆம் ஆண்டில் வேப்பேரியில் காலமானார். அவரது விசுவாசமிக்க சேவையைப் போற்றும் வகையில் அவரது கல்லறை வேப்பேரி ஆலய வளாகத்தில் அமைக்கப்பட்டது.

**3. கிறிஸ்டியன் வில்ஹெல்ம் கெரிக் (Christian Wilhelm Gericke) (1742-1803)**

**வரலாற்றுப் பங்களிப்பு:** மிஷனரி ஸ்வார்ட்ஸின் நெருங்கிய நண்பரும், ஃபேப்ரிசியஸுக்குப் பின் வேப்பேரியின் பொறுப்பை ஏற்றவருமான உன்னத மனிதர். 1782-இல் கூடலூர் பிரெஞ்சுக்காரர்களால் கைப்பற்றப்பட்டபோது, அங்கிருந்த தேவாலயத்தையும் மக்களையும் தனது மதிநுட்பத்தால் காத்தவர். 1803-இல் திருநெல்வேலியில் மாபெரும் ஆன்மீக எழுச்சியை வழிநடத்தியவர்.

**மறைவும் கல்லறையும்:** 1803 அக்டோபர் மாதத்தில் காலமானார். அவரது புனிதமான வாழ்வையும் தியாகத்தையும் போற்றும் வகையில் அவரது உடல் வேப்பேரி தேவாலய வளாகத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

### 4. டாக்டர் ஜான் பீட்டர் ராட்லர் (Dr. John Peter Rottler) (1749-1836)

**வரலாற்றுப் பங்களிப்பு:** வேப்பேரி மிஷனரியாகப் பணியாற்றிய இவர், உலகளவில் புகழ்பெற்ற சிறந்த தாவரவியலாளர் (Botanist) மற்றும் மொழியியல் அறிஞர் ஆவார். இவர் தயாரித்த விரிவான தமிழ்-ஆங்கில அகராதி (Rottler's Tamil-English Dictionary) தமிழக வரலாற்றில் மிக முக்கியப் படைப்பாகும்.

**மறைவும் கல்லறையும்:** 1836-ஆம் ஆண்டில் தனது 87-ஆம் வயதில் சென்னையில் காலமானார். அவரது அரிய அறிவியல் மற்றும் ஆன்மீகச் சேவைகளின் நினைவாக அவரது கல்லறை வேப்பேரி ஆலயத் தோட்டத்தில் இன்றும் நன்முறையில் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

### 5. கார்ல் வில்ஹெல்ம் பேசோல்டு (Carl Wilhelm Pazold) (இறப்பு: 1817)

**வரலாற்றுப் பங்களிப்பு:** வேப்பேரி மிஷனில் பல ஆண்டுகள் பணியாற்றி, கல்விப்பணிகளை முன்னெடுத்த ஜெர்மன் மிஷனரி ஆவார்.

**மறைவும் கல்லறையும்:** 1817-ஆம் ஆண்டில் சென்னையில் காலமானார். இவரது கல்லறை வேப்பேரி ஆலயத்தில் அமைந்துள்ளது.

## முடிவுரை

சென்னை வேப்பேரி தேவாலயம் என்பது வெறும் செங்கற்களாலும் சுண்ணாம்பாலும் கட்டப்பட்ட ஒரு வழிபாட்டுத் தலம் மட்டுமல்ல. அது 18-ஆம் நூற்றாண்டின் போர்க் காலங்கள், பிரெஞ்சுப் பீரங்கித் தாக்குதல்கள், வறுமை மற்றும் இடப்பெயர்வுகள் ஆகியவற்றைக் கடந்து, விசுவாசத்தின் வழியே தழைத்தோங்கிய ஒரு மாபெரும் வரலாற்றுச் சின்னம்.

அங்கு அச்சிடப்பட்ட முதல் தமிழ் விவிலியப் பிரதிகளும், சமுதாயத்தில் சாதிய ஒடுக்குமுறைகளுக்கு எதிராக மிஷனரிகள் மேற்கொண்ட ஆரம்பகாலச் சமத்துவப் போராட்டங்களும், ஆலய வளாகத்தில் உறங்கிக் கொண்டிருக்கும் ஃபேப்ரிசியஸ், கெரிக், ராட்லர் போன்ற உன்னத மிஷனரிகளின் கல்லறைகளும் இன்றைய நவீன சென்னை மாநகரத்தின் ஆன்மீக மற்றும் அறிவுசார் மறுமலர்ச்சிக்கு அசைக்க முடியாத அஸ்திவாரமாகத் திகழ்கின்றன.







# மரணத்தை வென்ற விசுவாசப் பிரகடனம்:

## கூடலூரில் பர்த்தலோமஸ் சீகன்பால்க்கின் அமைதியான இறுதி நிமிடங்களும் (1719)



18-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தென்னிந்தியாவில், குறிப்பாகத் தரங்கம்பாடியில் கால்பதித்த ஜெர்மன் லூத்தரன் மிஷனரியான பர்த்தலோமஸ் சீகன்பால்க் (Bartholomaus Ziegenbalg), இந்திய வரலாற்றில் ஒரு புதிய அறிவுசார் மற்றும் ஆன்மீக மறுமலர்ச்சியைத் தோற்றுவித்தவர் ஆவார். வெறும் 36 ஆண்டுகள் மட்டுமே இவ்வுலகில் வாழ்ந்த அவர், தமிழ் மொழிக்கும், அச்சுக்கலைக்கும், சமூகக் கல்விக்கும் ஆற்றிய பங்களிப்புகள் உலக வரலாற்றில் அழியாத சுவடுகளாக மாறியுள்ளன.

அவரது இடைவிடாத உழைப்பும் தியாகங்களும் நிறைந்த வாழ்க்கையின் இறுதிப் பகுதி சோதனைகள் நிறைந்ததாக இருந்தது. குறிப்பாக, 1719-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் கூடலூரில் (Cuddalore) அவர் கழித்த அமைதியான இறுதி நிமிடங்களும் அவரது மரணமும், விசுவாசத்தின் உச்சகட்ட வெளிப்பாடாகவும், ஒரு உன்னத ஆன்மீகப் போராளியின் பூலோக வாழ்வு எவ்வாறு நிறைவுபெற வேண்டும் என்பதற்கான வரலாற்றுச் சான்றாகவும் திகழ்கின்றன.

### 1. ஓயாத உழைப்பும் உடல்நலக் குறைவும் (The Declining Health)

சீகன்பால்க் இந்தியாவில் கால்பதித்த 1706-ஆம் ஆண்டு முதல், அவரது தினசரி வாழ்க்கை என்பது அசாத்தியமான உழைப்பாலும் தீவிரமான ஆன்மீகச் செயல்பாடுகளாலும் மட்டுமே நிறைந்திருந்தது. காலையில் விழித்தது முதல் இரவு படுக்கைக்குச் செல்லும் வரை, அவர் தமக்கென ஒரு வினாடியைக் கூட வீணடிக்கவில்லை.

- மொழியாற்றல் மற்றும் மொழிபெயர்ப்பு: தமிழ் மொழியைக் கற்றுக்கொள்வது, தமிழ் இலக்கியங்களை ஆராய்வது, விவிலியத்தைத் தமிழில் மொழிபெயர்ப்பது (இந்தியாவின் முதல் புதிய ஏற்பாட்டுத் தமிழ் மொழிபெயர்ப்பு - 1715) போன்ற அதிமானுடப் பணிகளில் ஈடுபட்டார்.
- கல்வி மற்றும் சமூகப் பணி: ஏழை எளியக் குழந்தைகளுக்கான பள்ளிகளைத் தொடங்குவது, தரங்கம்பாடி மற்றும் மெட்ராஸில் பள்ளிகளை நிறுவுவது என அவரது பணிகள் அசாத்திய வேகத்தில் நடந்தன.

அவரது இந்த ஓயாத, கடுமையான உழைப்பு (rastlose Geschaftigkeit) அவரது உடலின் ஆற்றலை மிக விரைவிலேயே உறிஞ்சிவிட்டது. 1718-ஆம் ஆண்டின் இலையுதிர்காலத்தில் (Autumn 1718), இந்த அயராத உழைப்பாளியின் உடல்நிலை மிக வேகமாகச் சீர்குலையத் தொடங்கியது. பல மாதங்களாக அவர் கடுமையான பலவீனத்தினாலும், தாங்க முடியாத குடல் மற்றும் உடல் வலியினாலும் அவதிப்பட்டு வந்தார். அவரது உடல் படுக்கையில் வீழ்ந்த போதிலும், அவரது ஆன்மீகத் தாகமும், சபை மக்களின் மீதான கவலையும் அவரை ஒருபோதும் முடக்கிப் போடவில்லை.

### 2. கடற்கரைப் பயணமும் கூடலூர் வருகையும் (The Coastline Journey to Cuddalore)

உடல்நிலை குன்றியிருந்த சீகன்பால்க், கடற்கரையோரக் காற்றின் வழியே தனக்குச் சுகம் கிடைக்கும் என்ற மங்கலான நம்பிக்கையில்,

கடற்கரை வழியே வடக்கு நோக்கி ஒரு பயணத்தை மேற்கொண்டார். கடலோர நகரங்களில் இருந்த புதிய விசுவாசிகளைச் சந்திப்பதும், அங்குள்ள பள்ளிகளைக் கண்காணிப்பதும் அவரது நோக்கமாக இருந்தது. ஏனெனில், 1717-ஆம் ஆண்டிலேயே அவரது முயற்சியால் கூடலூரிலும் மெட்ராஸிலும் தமிழ்ப் பள்ளிகள் நிறுவப்பட்டிருந்தன.

ஆனால், கூடலூரை (Cuddalore) வந்தடைந்தபோது, அவரது உடல்நிலை மேலும் மோசமடைந்தது. அங்கு அவர் குளுமையான காற்றின் சுகத்தைப் பெறுவதற்குப் பதிலாக, மரணத்தின் நிழல் தன்னைச் சூழ்ந்துகொள்வதை உணர்ந்தார். தனது பூலோகப் பயணம் முடிவுக்கு வரப்போகிறது என்பதையும், தனது இறுதி மணிநேரம் நெருங்கிவிட்டது என்பதையும் கூடலூரில் அவர் தெளிவாக உணர்ந்துகொண்டார்.

### 3. உன்னதத் தோழன் கிரண்ட்லருக்கு வந்த அவசர அழைப்பு (Summoning Johann Ernst Grandler)

கூடலூரில் மரணப் படுக்கையில் கிடந்த சீகன்பால்க், தனது இறுதி நிமிடங்களைத் தனிமையில் கழிக்க விரும்பவில்லை. தரங்கம்பாடியில் தங்கியிருந்த தனது உன்னதமான மற்றும் நம்பிக்கைக்குரிய சக மிஷனரியான ஜோஹன் எர்ன்ஸ்ட் கிரண்ட்லரை (Johann Ernst Grandler) உடனடியாகக் கூடலூருக்கு வருமாறு அவசர அழைப்பு விடுத்தார்.

கிரண்ட்லர் வெறும் உடன் ஊழியர் மட்டுமல்ல, சீகன்பால்க்கின் இதயத் துடிப்பை அறிந்தவர். சீகன்பால்க் ஐரோப்பாவிற்குப் பயணம் மேற்கொண்டிருந்தபோது (1714-1715), ஒட்டுமொத்த மிஷனின் பொறுப்பையும் தாங்கி நடத்தியவர் கிரண்ட்லரே ஆவார். சீகன்பால்க்கின் அழைப்பை ஏற்று, கிரண்ட்லர் பதறியடித்துக் கொண்டு தரங்கம்பாடியிலிருந்து கூடலூருக்கு விரைந்தார். மரணப் படுக்கையில் கிடந்த தனது அன்புத் தோழனைக் கண்ட கிரண்ட்லர் கண்ணீர் சிந்திய போதிலும், சீகன்பால்க்கின் முகத்தில் இருந்த அமைதியும் ஆன்மீகப் பொலிவும் அவரை வியக்க வைத்தன.

### 4. விசுவாசப் பகிர்வும் ஆன்மீகப் பிரகடனமும் (Spiritual Dialogue and Confession)

கிரண்ட்லர் தனது படுக்கைக்கு அருகில் அமர்ந்ததும், சீகன்பால்க் தனது இதயத்தில் இருந்த விசுவாசக் கதவுகளைத் திறந்து பேசினார். தான் செய்த குற்றங்களையும், தனது பலவீனங்களையும் நினைத்து இறைவனிடம் மனம் வருந்தும் (buafertige) அதே வேளையில், கிறிஸ்துவின் மீட்பின் பலியினால் தனக்குக் கிடைக்கப்போகும் நித்திய இரட்சிப்பைக் குறித்த அசைக்க முடியாத நம்பிக்கையையும் (zuversichtliche und freudige Hoffnung) அவர் கிரண்ட்லரிடம் பகிர்ந்துகொண்டார்.

அவர் தனது மரணத்தை ஒரு தோல்வியாகவோ அல்லது பயங்கரமான ஒன்றாகவோ பார்க்கவில்லை. மாறாக, கிறிஸ்துவுக்குள் தமக்குக் கிடைக்கவிருக்கும் பரலோக இராஜ்ஜியத்தின் விடியலாகவே அதனைக் கருதினார். அவரது இந்த விசுவாசப் பிரகடனம், மரணத் தறுவாயிலும் ஒரு மனிதன் எவ்வாறு கிறிஸ்துவின் சிலுவை அன்பில் நிலைத்திருக்க முடியும் என்பதற்கு உன்னத உதாரணமாக அமைந்தது.

### 5. நற்கருணை வழிபாடும் லூதரின் பாசுரமும் (The Holy Communion and Luther's Hymn)

தனது ஆத்துமப் பகிர்வுக்குப் பிறகு, சீகன்பால்க் தனது உன்னதத் தோழனான கிரண்ட்லரின் கைகளிலிருந்து புனித நற்கருணையைப் (Holy Communion) பெற்றுக்கொள்ள விரும்பினார். கிரண்ட்லர் கண்ணீரோடு ஜெபித்து, அப்பத்தையும் திராட்சரசத்தையும் சீகன்பால்க்கிற்கு வழங்கினார். நற்கருணையைப் பெற்றுக்கொண்ட சீகன்பால்க்கின் ஆத்துமா பரலோக அமைதியினால் நிரம்பியது.

அதன்பின், அவர் தனது இறுதி ஆசையாக ஒரு உன்னத வேண்டுதலை விடுத்தார். தனது வாழ்நாளில் பலமுறை சவால்களையும் துன்பங்களையும் சந்தித்தபோது, தனது ஆத்துமாவைத் தேற்றிய மாபெரும் ஆன்மீகப் பாடகரான மார்ட்டின் லூதரின் (Martin Luther) பாசுரம் ஒன்றை அங்கிருந்தோரைத் தனக்காகப் பாடுமாறு கேட்டுக்கொண்டார். மார்ட்டின் லூதரின் பாடல்கள் ஜெர்மன் லூத்தரன் விசுவாசிகளின் ஆன்மீகப் போர்க் கருவிகளாகத் திகழ்ந்தவை. சீகன்பால்க் தனது ஊழியப் பயணத்தின் அஸ்திவாரமாக விளங்கிய அந்தப் புனிதமான பாசுர இசையைக் கேட்டுக்கொண்டே தன் கண்களை மூடினார்.

### 6. அமைதியான விடைபெறுதல் (The Peaceful Passing - 23 February 1719)

கூடலூர் மிஷன் இல்லத்தின் அந்த எளிய அறையில், மார்ட்டின் லூதரின் கம்பீரமான ஆன்மீகப் பாசுரம் காற்றில் மெதுவாக ஒலித்துக்கொண்டிருந்தது. அந்தப் புனிதமான இசைக் காற்றின் ஊடே, தேவனின் பேரமைதி (hohen Frieden Gottes) சீகன்பால்க்கைச் சூழ்ந்துகொண்டது.

அந்தப் பாசுர ஒலி நிறைவடையும் தறுவாயில், 1719-ஆம் ஆண்டு பிப்ரவரி 23-ஆம் தேதி, பர்த்தலோமஸ் சீகன்பால்க் தனது ஆத்துமாவை

இறைவனிடம் ஒப்படைத்தார்.

அவர் காலமான போது அவருக்கு வயது வெறும் 36 மட்டுமே. மிகவும் குறுகிய காலமே இவ்வுலகில் வாழ்ந்த போதிலும், அவர் செய்த பணிகள் பல நூற்றாண்டுகளுக்குத் தேவையான அஸ்திவாரத்தைப் போட்டிருந்தன. அவரது மரணம், அவரது நம்பிக்கைக்குரிய தோழரான கிரண்ட்லரையும், தரங்கம்பாடி மற்றும் கூடலூரின் எளிய விசுவாசிகளையும் பெரும் துயரத்தில் ஆழ்த்தியது.

### 7. உடல் தரங்கம்பாடிக்குக் கொண்டு செல்லப்பட்டு அடக்கம் செய்யப்படுதல் (Burial in Tranquebar)

கூடலூரில் சீகன்பால்க் காலமான போதிலும், அவரது இறுதி ஓய்விடம் அவர் தனது வாழ்நாளின் பெரும்பகுதியைக் கழித்து, முதன்முதலில் அஸ்திவாரம் போட்ட தரங்கம்பாடியிலேயே அமைய வேண்டும் என்று முடிவுசெய்யப்பட்டது.

அவரது உடல் பக்தி மரியாதையுடன் தரங்கம்பாடிக்குக் கொண்டு செல்லப்பட்டு, அங்குள்ள புதிய எருசலேம் தேவாலயத்தின் (Missionskirche) பலிபீடத்திற்கு அருகில் அடக்கம் செய்யப்பட்டது.

இந்த இழப்பை கிரண்ட்லரால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. சீகன்பால்க் மறைந்த ஓராண்டு காலத்திற்குள், அதாவது 1720 மார்ச் 18 அன்று கிரண்ட்லரும் இயற்கை எய்தினார். அவரது இறுதி ஆசையின்படி, அவரது உடலும் தரங்கம்பாடி தேவாலயத்தில், அவரது உன்னதத் தோழனான சீகன்பால்க்கின் கல்லறைக்கு அருகிலேயே அடக்கம் செய்யப்பட்டது.

### 8.புதிய ஊழியர்களின் வருகையும் கூடலூர் மிஷனின் வளர்ச்சியும் (The Legacy and Continuation)

சீகன்பால்க் மற்றும் கிரண்ட்லரின் அடுத்தடுத்த மரணங்களால் தரங்கம்பாடி மிஷன் அனாதையாக்கப்பட்டது போலத் தோன்றியது. ரோமன் கத்தோலிக்க எதிர்ப்பாளர்கள் இந்த மிஷன் விரைவில் அழிந்துவிடும் என்று எதிர்பார்த்தனர்.

ஆனால், தேவன் தமது பணியை நிறுத்தவில்லை. சீகன்பால்க் மறைந்த அதே ஆண்டின் செப்டம்பர் திங்களில் (September 1719), ஜெர்மனியிலிருந்து மூன்று புதிய மிஷனரிகள் - பெஞ்சமின் ஷுல்ட்ஸ் (Benjamin Schultze), நிக்கோலஸ் தால் (Nikolaus Dal), மற்றும் ஜோஹன் ஹென்றிச் கிஸ்டெமேக்கர் (Johann Heinrich Kistemacher) ஆகியோர் தரங்கம்பாடிக்கு வந்து சேர்ந்தனர்.

இவர்களின் வருகை, சீகன்பால்க் கூடலூரில் விதைத்த அந்த விசுவாச விதையை மேலும் தழைக்கச் செய்தது. பிற்காலத்தில், 1737-ஆம் ஆண்டில் மிஷனரிகள் சார்டோரியஸ் மற்றும் கெய்ஸ்டர் ஆகியோரால் கூடலூரில் ஒரு நிரந்தரமான கிளை மிஷன் நிறுவப்பட்டு, அங்குள்ள எளிய மக்களுக்குக் கல்வியும் ஆன்மீகப் பயிற்சியும் வழங்கப்பட்டன.

கூடலூரில் பர்த்தலோமஸ் சீகன்பால்க்கின் அமைதியான இறுதி நிமிடங்கள், நமக்கு ஒரு உன்னதமான வாழ்வியல் தத்துவத்தைக் கற்றுத் தருகின்றன. விசுவாசம் என்பது சுகமான காலங்களில் மட்டும் பிரசங்கிப்பது அல்ல; அது மரணத்தின் விளிம்பிலும், கடுமையான வேதனைகளின் மத்தியிலும் அசைக்க முடியாத அமைதியோடும், துதிப்பாடல்களோடும் இறைவனைத் தழுவிக்கொள்வதாகும்.

மார்ட்டின் லூதரின் பாசுர இசையோடு, கூடலூரில் நிகழ்ந்த அவரது அமைதியான மறைவு, இந்தியக் கிறித்தவ வரலாற்றில் ஒரு உன்னத ஆன்மீகப் போராளியின் வாழ்வு எவ்வாறு கம்பீரமாக நிறைவுற்றது என்பதற்கான அழியாத சாட்சியமாகும்.



# அக்ரஹாரத்து அதிசய மனிதர்: பால் ரங்க ராமானுஜத்தின் தியாக வாழ்வு



*Y. ரூஸ்லவெல் (வரலாற்று ஆசிரியர்)*

மன்னார்குடி என்றாலே நம் நினைவுக்கு வருவது அங்குள்ள பிரம்மாண்டமான ராஜகோபால சுவாமி கோவிலும், வேத கோஷங்கள் முழங்கும் அக்ரஹாரத் தெருக்களும்தான். அத்தகைய ஒரு வைதீகச் சூழலில், 1908-ஆம் ஆண்டு ஒரு பக்திமிக்க பிராமணக் குடும்பத்தில் பிறந்தவர்தான் ரங்க ராமானுஜம். ஆனால், காலத்தின் சுழற்சியில் அவர் 'பால் ரங்க ராமானுஜம்' என்ற பெயரோடு ஒரு மாபெரும் ஆன்மீகப் புரட்சியாளராக உருவெடுப்பார் என்று அன்று எவரும் ஊகித்திருக்க முடியாது.

## மாற்றத்தைத் தந்த சந்திப்பு

தன்னுடைய 15-ஆவது வயதில், மன்னார்குடி அக்ரஹாரத்தில் ஒரு வெள்ளைக்கார மிஷனரியைச் சந்தித்தது ரங்க ராமானுஜத்தின் வாழ்வில் மிகப்பெரிய திருப்புமுனையை ஏற்படுத்தியது. ஜே.ஜே. எல்லிஸ் (J.J. Ellis) என்ற அந்த மிஷனரி, இவருடைய நீண்ட பெயரை உச்சரிக்கச் சிரமப்பட்டு, அன்போடு 'பால்' (Paul) என்று அழைத்தார். அது வெறும் பெயர் மாற்றம் மட்டுமல்ல, ஒரு புதிய வாழ்விற்கான தொடக்கப்புள்ளி.

## அக்ரஹாரத்தில் ஒரு புரட்சி

தன்னுடைய இளம் வயதிலேயே கிறிஸ்துவக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்ட ரங்க ராமானுஜம், தனது நண்பர்களுடன் இணைந்து 'Carry The News' (CTN) என்ற ரகசியக் குழுவை உருவாக்கினார். அக்ரஹாரத்தில் ஒரு பிராமண இளைஞன் கிறிஸ்துவ மதத்தின் மீது ஆர்வம் காட்டுவது அக்காலத்தில் மிகப்பெரிய அதிர்வலைகளை ஏற்படுத்தியது. குடும்பத்தினர் இவரை வீட்டுச் சிறையில் வைத்தனர். ஆனால், சிறையிலும் அவர் மௌனமாக இருக்கவில்லை; தனக்குப் பிடித்தமான பாடல்களைப் பாடி இறைவனைத் துதித்துக் கொண்டிருந்தார்.

## தியாகத்தின் உச்சம் - 1911 ஜூலை

"சொல்லாமல் கொள்ளாமல் வீட்டை விட்டுச் செல்ல மாட்டேன்" என்று தன் தந்தைக்கு வாக்குக் கொடுத்திருந்தார் ராமானுஜம். அந்த வாக்கை நிறைவேற்றும் பொருட்டு, 1911 ஜூலை மாதம் ஒரு மாலை வேளையில், தன் உடலில் இருந்த பூணூல் மற்றும் ஆபரணங்களைக் கழற்றி வைத்துவிட்டு, வெறும் துண்டு ஒன்றை மட்டும் கட்டிக்கொண்டு வீட்டை விட்டு வெளியேறினார். "எதையும் நான் எடுத்துச் செல்லவில்லை, எவரும் என் மீது குற்றம் சாட்டக் கூடாது" என்று கூறிவிட்டு அவர் வெளியேறிய காட்சி காண்போர் கண்களில் நீரை வரவழைத்தது.

தேவாலயத்தின் வாசலில் நின்று அவருடைய தாய் கதறி அழுதபோதும், "இறைவனின் பணியே சிறந்தது" என்று உறுதியோடு நின்றார். அன்றே அவர் 'பால் ரங்க ராமானுஜம்' ஆக ஞானஸ்நானம் பெற்றார்.

## மக்கள் பணியும் ஊழியமும்

சென்னையில் கல்வி பயின்ற பால் ரங்க ராமானுஜம், பின்னர் தாரபுரம் மற்றும் கரூர் பகுதிகளில் தனது ஊழியத்தைத் தொடங்கினார். ஒடுக்கப்பட்ட மற்றும் ஏழ்மையான மக்களின் முன்னேற்றத்திற்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டார். முதல் உலகப் போர் நடந்த காலத்தில், மெசபடோமியாவிற்குச் சென்று அங்குள்ள இந்திய வீரர்களிடையே பணியாற்றியது இவரது வாழ்வின் மற்றொரு முக்கியமான மைல்கல்.

மேற்கத்திய நாடுகளுக்குப் பயணம் செய்தபோது,

அங்குள்ள சபைகளில் இந்தியக் கலாச்சார மணம் கமழ வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார். "தேவன் இந்திய மண்ணின் வாசனை வீசும் மொழியில் பேசுகிறார்" என்று உரக்கச் சொன்னார்.

## தென்னிந்தியத் திருச்சபை (CSI) - ஒரு கனவு

பல்வேறு பிரிவுகளாகப் பிரிந்து கிடந்த கிறிஸ்துவ சபைகளை ஒன்றிணைக்க வேண்டும் என்பது பால் ரங்க ராமானுஜத்தின் நீண்ட நாள் கனவு. அதற்காக அவர் அரும்பாடுபட்டார். 1945-ஆம் ஆண்டு ஜூன் 4-ஆம் தேதி மதுரையில் அவர் காலமானபோது, அவரது கனவு முழுமையடையவில்லை. ஆனால், அவர் மறைந்து இரண்டு ஆண்டுகளில், 1947 செப்டம்பர் 27 அன்று அவர் ஆசைப்பட்டபடியே 'தென்னிந்தியத் திருச்சபை' (CSI) உதயமானது.

## முடிவுரை

தன் குலம், சாதி, செல்வம் என அனைத்தையும் துறந்து, ஏழை எளிய மக்களின் நல்வாழ்விற்காகத் தன் வாழ்வை அர்ப்பணித்தவர் பால் ரங்க ராமானுஜம். திருச்சி உறையூரில் உள்ள புனித பவுல் ஆலயம் இன்றும் இவரது ஊழியத்தின் நினைவாகத் திகழ்கிறது. அக்ரஹாரத்தில் பிறந்து அகிலமெங்கும் அன்பைப் பரப்பிய அந்த அதிசய மனிதரின் வரலாறு, இன்றும் பலருக்கு ஊக்கமளிக்கும் ஒரு காவியமாகும்.




கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்

மாத ஆய்விதழ் சந்தா விபரம்

| சந்தா விவரம் | நன்கொடை |
| --- | --- |
| தனிப்பிரதி | ₹60 + நன்கொடை |
| ஆண்டு சந்தா | ₹600 + நன்கொடை |
| ஐந்து ஆண்டு சந்தா | ₹3000 + நன்கொடை |

வங்கி விபரம்

Name: CHRISTAVA VARALATRU SUVADUGAL

A/c Number : 1748 020000 5614

Bank name : Federal Bank

IFSC code: FDRL0001748

"கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்"
மாத ஆய்விதழை நீங்கள்
தொடர்ந்து பெற்றுக் கொள்ள
G-Pay மூலம் நன்கொடை செலுத்த
90420 15221 என்ற எண்ணுக்கு செலுத்தவும்
காசோலை மற்றும் வரைவோலை செலுத்த
"கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்"
( CHRISTAVA VARALATRU SUVADUGAL )
என்ற பெயரில் எடுக்கவும்

கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்,
கதவு எண் 2-2-3(4), வடக்குத்தெரு,
பங்களாச் சுரண்டை-627859,
தென்காசி மாவட்டம் (தமிழ்நாடு)
04633 290401, 91767 80001

christianhistoricalsociety.in
christianhistorical@gmail.com

# விசுவாசத்தின் சிறு விதையிலிருந்து எழுந்த ஆலயம்



## கோவில்பட்டி சேகரம் — திப்பனூத்து தூய பவுல் ஆலய வரலாறு



அருள்திரு. R. சாமுவேல் ஜெயசீலன்

கோவில்பட்டி சேகரத்தின் கடலையூர் சபையிலிருந்து சுமார் 3 கிலோ மீட்டர் தொலைவில், பேருந்து வசதியில்லாத சிறிய கிராமமாகத் திப்பனூத்து அமைந்திருந்தது. சுமார் 100 குடும்பங்கள் வாழ்ந்த இக்கிராமம் மேட்டுத் திடலில் அமைந்துள்ளது.

கிராமத்தின் அருகிலிருந்த பள்ளத்தாக்கில் நல்ல ஊற்று நீர் இருந்த காரணத்தால் இந்த ஊருக்கு 'திப்பனூத்து' என்ற பெயர் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது. அந்தப் பள்ளத்தாக்கில் சுமார் 100 ஏக்கர் பரப்பளவில், அந்நாளில் எட்டையபுரம் ஜமீனுக்குச் சொந்தமான விவசாயப் பண்ணை இருந்தது. அந்தப் பண்ணையில் வேலை செய்வதற்காகப் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த மக்கள் இந்த மேட்டுத் திடலில் குடியேறினர். குறிப்பாக சங்கரன்கோவில் அருகிலுள்ள பனையூரிலிருந்தும், கயத்தாறு அருகிலுள்ள வேப்பங்குளத்திலிருந்தும், எட்டையபுரம் அருகிலுள்ள ராஜாபட்டியிலிருந்தும் மக்கள் இங்கு வந்து குடியேறினர்.

### தீப்பனூத்தில் கிறிஸ்தவத்தின் முதல் விதை

சுமார் 90 ஆண்டுகளுக்கு முன்பு, சங்கரன்கோவில் அருகிலுள்ள கோமதிமுத்துபுரம் சபையைச் சேர்ந்த பேரின்பம், மரியாள் என்ற இரு சகோதரிகள் திப்பனூத்தைச் சேர்ந்த அண்ணன், தம்பி இருவருக்குத் திருமணம் செய்து கொடுக்கப்பட்டனர்.

இதன் வழியாக கிறிஸ்தவத்தின் முதல் அறிமுகம் திப்பனூத்து கிராமத்திற்குள் வந்தது. மரியாளின் கணவர் சாமியாடியாக இருந்தார். பேரின்பம் அம்மாள் பின்னர் தனது கணவருடன் கோமதிமுத்துபுரத்தில் குடியேறினார். ஆனால் மரியாள் இந்து சாமிகளை வணங்காமல் கிறிஸ்தவ வாழ்க்கையைத் தொடர்ந்தார். அருகில் ஆலயம் இல்லாததால் அவர் ஆலயத்திற்குச் செல்ல முடியாத சூழலும் இருந்தது.

அவரது பிள்ளைகள் கிறிஸ்தவ வழியில் வளராமல் தந்தையின் வழியிலேயே வளர்ந்தனர். திருமணங்களும் இந்து சமய முறையிலேயே நடைபெற்றன. பின்னர் பேரப்பிள்ளைகள் வளரத் தொடங்கியபோது, அவர்கள் கிறிஸ்தவ விசுவாசத்தில் நிலைத்திருக்க வேண்டும் என்ற எண்ணம் மீண்டும் குடும்பத்தில் வலுப்பெற்றது.

### திருமணங்களின் வழியாக மீண்டும் வலுப்பெற்ற விசுவாசம்

மூத்த பேரன் பால்பாண்டிக்கு, கோமதிமுத்துபுரத்தைச் சேர்ந்த அமுதா என்பவரை 1988-ஆம் ஆண்டு திருமணம் செய்து வைத்தனர். இது பொதுவான திருமணமாக நடைபெற்றது.

இரண்டாவது மகன் சிங்காரவேலுக்கு, கோமதிமுத்துபுரத்தைச் சேர்ந்த அருள்மணி என்ற பெண்ணை 1997-ஆம் ஆண்டு கோவில்பட்டியில் கிறிஸ்தவ முறைப்படி திருமணம் செய்து வைத்தனர்.

அமுதாவும் அருள்மணியும் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் சுமார் 3 கிலோ மீட்டர் நடந்தே கடலையூர் தூய பவுலின் ஆலயத்திற்குச் சென்று ஆண்டவரை ஆராதித்தனர்.

சிங்காரவேல் பின்னர் 'ஸ்தேவான்' என்ற பெயரில் ஞானஸ்நானம் பெற்றார். சிங்காரவேல்-அருள்மணி தம்பதியருக்கு ஏழு ஆண்டுகளாக குழந்தை இல்லாத நிலையிலும் அவர்கள் விசுவாசத்தில் உறுதியாக இருந்தனர்.

### இரவிலும் நடந்தே சென்ற ஆராதனைப் பயணம்

ஆரம்ப காலங்களில் பண்டிகைகளுக்காக அவர்கள் கோமதிமுத்துபுரத்திற்குச் சென்றனர். பின்னர் கடலையூர் ஆலயத்தில் பண்டிகை ஆராதனைகளில் பங்கேற்கத் தொடங்கினர்.

சில சமயங்களில் இரவு 2 மணி, 3 மணி நேரங்களில்கூட நடந்தே கடலையூருக்குச் சென்றுள்ளனர். 2005-ஆம் ஆண்டு புத்தாண்டு ஆராதனைக்காக இரவு 2 மணியளவில் திப்பனூத்திலிருந்து கடலையூர் ஆலயத்திற்குப் புறப்பட்டுச் சென்றனர்.

அவர்கள் ஆலயத்திற்கு முதலில் சென்றவர்களாக இருந்ததாக நூல் பதிவு செய்கிறது. ஆராதனை முடிந்தபின் குருவானவர் அவர்களுக்காக ஜெபித்து, 'கர்ப்பத்தின் கனியை ஆண்டவர் தருவார்' என்று ஆசீர்வதித்தார். அதே ஆண்டின் செப்டம்பர் மாதத்தில் அவர்களுக்கு ஆண் குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தைக்கு சாமுவேல் என்று பெயரிட்டனர்.

**'எங்கள் ஊரில் ஆலயம் இருந்தால்தான்...'**

சிங்காரவேல்-அருள்மணி குடும்பத்திற்கு திப்பனூத்தில் சொந்த இடம் இல்லாத நிலையில், 2002-ஆம் ஆண்டு அவர்களுக்கு சொந்த இடமும் வீடும் கிடைத்ததாக நூல் குறிப்பிடுகிறது.

**ஆனால் அருள்மணி அம்மாளின் மனதில் ஒரு பெரிய ஏக்கம் இருந்தது:**

'எங்கள் ஊரில் ஆலயம் இருந்தால்தான் எங்கள் பிள்ளைகள் கிறிஸ்தவ வழியில் வளருவார்கள்; இல்லாவிட்டால் எங்கள் காலத்திற்குப் பிறகு அவர்கள் வாழ்க்கை கேள்விக்குறியாகிவிடும்' என்று அவர் கூறிவந்தார்.

அதனால், 'ஆண்டவர் எனக்கு இன்னும் ஒரு இடத்தைக் கொடுத்தால், அதை ஆலயம் கட்டுவதற்காகக் கொடுப்பேன்' என்று பொருத்தனை செய்து ஜெபித்தார்.

அந்தச் சூழலில் அவருடைய உறவினர் ஒருவர் தமக்குச் சொந்தமான $2_{1/2}$ சென்ட் பட்டா நிலத்தை ரூ.4,000-க்கு விற்க முன்வந்தார். அப்போது கையில் பணம் இல்லாத நிலையிலும் அருள்மணி அம்மாள் தனது தங்கச் செயினை அடகு வைத்து ரூ.4,000 பெற்று, 2007-ஆம் ஆண்டு அந்த இடத்தை வாங்கினார். சில பிரச்சினைகளுக்குப் பிறகு 2008-ஆம் ஆண்டில் அந்த நிலம் அவர்கள் பெயரில் பதிவு செய்யப்பட்டது.

**கண்ணீரோடு எழுந்த ஆலய வேண்டுகோள்**

ஒரு மங்கள வாக்குத் திருநாளில் கடலையூர் பழைய ஆலயத்தில் கோவில்பட்டி சேகரப் பெண்களுக்கான நிகழ்ச்சி நடைபெற்றது. அருள்மணியும் அமுதாவும் அதிகாலை 3 மணிக்கே திப்பனூத்திலிருந்து புறப்பட்டு கடலையூர் ஆலயத்திற்குச் சென்றனர்.

அங்கிருந்த சபை ஊழியரிடம், தங்கள் ஊரில் ஆலயம் கட்ட வேண்டும் என்று அவர்கள் வேண்டுகோள் வைத்தனர்.

பின்னர் சேகரத் தலைவர் அருள்திரு. M. ஆஷீர் ஜோசப் மற்றும் திருமதி சாந்தினி ஆஷீர் ஆகியோரின் முன்னிலையில் நடைபெற்ற வரவேற்பு நிகழ்ச்சியில், அருள்மணி அம்மாள் மைக்கில் மிகுந்த பாரத்தோடும் கண்ணீரோடும்,

'எப்படியாவது எங்களுக்கு ஒரு ஆலயம் கட்டித் தர வேண்டும்'

என்று கேட்டுக்கொண்டார்.

**வீட்டின் முன் வேப்பமரத்தடியில் தொடங்கிய ஜெபக்கூட்டம்**

கோவில்பட்டி சபையிலிருந்து ஒவ்வொரு மாதமும் நான்காவது ஞாயிற்றுக்கிழமை சுவிசேஷ ஊழியத்திற்காக கிராமங்களுக்கு செல்வது வழக்கமாக இருந்தது.

திப்பனூத்து அருள்மணி அம்மாளின் வேண்டுகோளைத் தொடர்ந்து, கோவில்பட்டி உதவி குருவானவர் அருள்திரு. J. சாமுவேல் ஜெசுதாசன்,

**'ஆலயம் கட்டுவதற்கு இடம் கொடுங்கள். நாங்கள் உங்கள் ஊருக்கு வந்து வீடுகளைச் சந்தித்து ஆலயம் கட்டுவதற்கு ஏற்பாடு செய்கிறோம்'**

என்று கூறினார்.

அடுத்த மாதமே நான்காவது ஞாயிற்றுக்கிழமை மாலை தீப்பனூத்திற்குச் சென்று வீடுகளைச் சந்தித்தனர். பின்னர் அமுதாவின் வீட்டின் முன்பிருந்த வேப்பமரத்தடியில் ஜெபக்கூட்டம் நடைபெற்றது.

அதைத் தொடர்ந்து ஒவ்வொரு வாரமும் ஞாயிறு மாலை 5 மணிக்கு, கோவில்பட்டியைச் சேர்ந்த திரு. சௌந்தர் அவர்கள் ஜெபக்கூட்டத்தைப் பொறுப்பேற்று நடத்தினார். மக்கள் ஆர்வமாகப் பங்கேற்றனர்.

சிங்காரவேல்-அருள்மணி தம்பதியர் தங்கள் இடத்தை ஆலயம் கட்டுவதற்காக திருமண்டலத்திற்கு எழுதி வழங்கினர்.

**100 ஆலயத் திட்டத்தின் கீழ் திப்பனூத்து**

அருள்மணி அம்மாளின் கண்ணீர் வேண்டுகோள் பேராயரம்மாவின் உள்ளத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தியதாக நூல் குறிப்பிடுகிறது.

கடலையூர் ஆலயப் பணிகள் முடிந்தபின், திருமண்டல 100 ஆலயத் திட்டத்தின் கீழ் அடுத்ததாக திப்பனூத்தில் ஆலயம் கட்டப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. இது திப்பனூத்து சபையாருக்கு மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

சேகரத் தலைவர் அருள்திரு. M. ஆஷீர் ஜோசப் அவர்கள், 100 ஆலயத் திட்டப் பொறுப்பாளர்களிடம் திப்பனூத்து சபையில் ஆலயம் கட்ட வேண்டுமென கோரிக்கை வைத்தார்.

திட்டப் பொறுப்பாளர்கள் இடத்தைப்

பார்வையிட்டு, தூத்துக்குடி-நாசரேத் திருமண்டல ஜெயராஜ் அன்னபாக்கியம் பொறியியல் கல்லூரி சார்பில் ஆலயத்தை கட்டிக் கொடுக்க ஏற்பாடு செய்தனர். கல்லூரி நிர்வாகமும் மகிழ்ச்சியுடன் அதற்கு ஒப்புக்கொண்டது.

### 19.03.2017 - ஆலயத்திற்கு அஸ்திபாரம்

திருமண்டல பிரதமப் பேராயரின் ஆணையர் அருள்திரு. D. ஜெசுசகாயம் அவர்களால் 19.03.2017 அன்று மாலை ஆலயத்திற்கு அஸ்திபாரம் இடப்பட்டது.

கோவில்பட்டி சேகரத்திலிருந்தும் பொறியியல் கல்லூரியிலிருந்தும் பலர் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

### 370 அடியில் பொங்கிய தண்ணீர்

ஆலயக் கட்டுமானத்திற்குத் தேவையான தண்ணீருக்காக ஆழ்துளைக் கிணறு அமைக்கப்பட்டது. ஊர் மக்களும், இந்தக் கிணற்றிலிருந்து ஊருக்கே தண்ணீர் கிடைத்தால் அது ஆலயம் கட்டப்பட வேண்டும் என்ற ஆண்டவரின் விருப்பத்திற்கு அடையாளமாக இருக்கும் என்று பேசிக்கொண்டனர்.

ஆனால் 350 அடி ஆழம் வரை சென்றபோதும் தண்ணீர் கிடைக்கவில்லை.

அப்போது வழக்கறிஞர் V. செல்வின் ராஜகுமார், உதவி குருவானவர் அருள்திரு. J. சாமுவேல் ஜெசுதாசன் மற்றும் அங்கிருந்தவர்கள் ஒன்றுகூடினர். உதவி குருவானவர் ஜெபித்தார்.

370 அடி ஆழத்தில் தண்ணீர் பொங்கி வந்தது.

இதனால் மக்கள் அனைவரும் பெரும் சந்தோஷம் அடைந்தனர்.

### கல்லூரியின் பங்களிப்பும் சபையாரின் உழைப்பும்

ஆலயத்தை கட்டுவதற்காக CSI-TND ஜெயராஜ் அன்னபாக்கியம் பொறியியல் கல்லூரி ரூ.7 லட்சம் காணிக்கையாக வழங்கியது.

கட்டுமானப்பணி வேகமாக நடைபெற்றது. கடலையூர் சபை மக்கள், கோவில்பட்டி சேகர குருவானவர் தலைமையில் கோவில்பட்டி சேகர மக்கள் மற்றும் பலர் தங்களால் இயன்ற உதவிகளைச் செய்தனர். இதன் மூலம் ஆலயம் கட்டி முடிக்கப்பட்டது.

### 13.08.2017 - தூய பவுலின் ஆலயம் அர்ப்பணிப்பு

புதிய ஆலயம் கட்டி முடிக்கப்பட்டு 'தூய பவுலின் ஆலயம்' என்று பெயரிடப்பட்டது.

13.08.2017 அன்று தூத்துக்குடி-நாசரேத் திருமண்டல பேராயர் அருட்பெருந்திரு. அறிவர் S.E.C. தேவசகாயம் அவர்களால் ஆலயம் மங்களப்படைப்பு செய்யப்பட்டது.

**நூலில் குறிப்பிடப்படும் ஒரு முக்கியமான செய்தி என்னவெனில், பேராயர் அருட்பொழிவு பெற்றபின் அவர் பிரதிஷ்டை செய்த முதல் ஆலயம் இதுவாகும்.**

பேராயரம்மா திருமதி சாந்தினி தேவசகாயம் அவர்களும் நிகழ்ச்சியில் பங்கேற்றார்.

கோவில்பட்டி சேகர குருவானவரும் ராக்லண்ட் சபைமன்றத் தலைவருமான அருள்திரு. M. ஆஷீர் ஜோசப், கோவில்பட்டி சேகர உதவி குருவானவர் அருள்திரு. J. சாமுவேல் ஜெசுதாசன், திப்பனூத்து சபை ஊழியர் திரு. T.N. ராஜன், CSI-TND ஜெயராஜ் அன்னபாக்கியம் பொறியியல் கல்லூரி நிர்வாகத்தினர் மற்றும் கோவில்பட்டி சேகர மூப்பர்கள் ஆகியோர் ஆலயப் பிரதிஷ்டைக்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்.

கோவில்பட்டி சேகர மக்கள், பொறியியல் கல்லூரி பேராசிரியர்கள், அலுவலகப் பணியாளர்கள், திப்பனூத்து சபை மக்கள், உறவினர்கள் எனத் திரளானோர் கலந்துகொண்டு பிரதிஷ்டை ஆராதனையைச் சிறப்பித்தனர்.

### வளர்ந்து வரும் திருச்சபை

புதிய ஆலயம் உருவான பிறகு ஆராதனைகள் ஒழுங்காக நடைபெறத் தொடங்கின. சபை ஊழியரின் பணியும் சிறப்பாக நடைபெற்று வந்தது.

பல குடும்பத்தினர் ஞானஸ்நானம் பெற்று திருச்சபையில் இணைந்தனர். நூல் எழுதப்பட்ட காலத்தில் 15 குடும்பங்கள் திருச்சபையில் இணைந்திருந்ததாகவும், மேலும் பல குடும்பங்கள் சேர ஆயத்தமாக இருந்ததாகவும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அப்போது சுமார் 30 பேர் ஆலய ஆராதனையில் பங்கேற்றனர். மாதந்தோறும் மூன்றாவது ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு திருவிருந்து ஆராதனை நடைபெற்றது.

புதிய ஆலயத்தில் நடைபெற்ற முதல் கிறிஸ்தவத் திருமணம் பாபு-கவிதா ஆகியோருக்கிடையே 19.10.2018 அன்று நடைபெற்றதாகவும் நூல் பதிவு செய்கிறது.

### திப்பனூத்து சொல்லும் வரலாற்றுச் செய்தி

திப்பனூத்து போன்ற, மிகச் சிலரே கிறிஸ்தவர்களாக இருந்த ஒரு கிராமத்தில் ஆலயம் எழுப்பப்பட்டபோது, புதிய குடும்பங்கள் திருச்சபையில் இணைந்து சபை வளர்ந்தது.

எனவே நூலாசிரியர் இறுதியில் தீப்பனூத்தை,

'ஒரு சிலர் மட்டுமே கிறிஸ்தவர்களாக இருக்கிற ஊர்களிலும் ஆலயத்தைக் கட்டும்போது புதிய குடும்பங்கள் திருச்சபையில் சேர்ந்து சபை வளரும் என்பதற்கான ஒரு சான்று'

என்று பதிவு செய்கிறார்.




# Yearly Subscription

**600**

christianhistoricalsociety.in

Apply Now

## Monthly Magazine for church history

Return Requested:

Tamil Printed Book- For Private Circulation Only

To

**CHRISTAVA VARALATRU SUVADUGAL**
# 2.2.3(4)North Street,
Bungalow Surandai-627859.
Tenkasi District
Tamil Nadu
Ph: 04633 290401
Mo: **91767 80001**

Owned & Published By CHRISTIAN HISTORICAL SOCIETY, Tamil Education- For Private Circulation Only
Editor|G.MUTHAIAH SELVAKUMAR| at 2.2.3(4)North Street, Bungalow Surandai-627859. Tenkasi District Ph: 04633 290401